பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 பங்குனி 15 ரபி ஆகி: 7 இதழ்- 46
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-3-77

## மூதறிஞர் உடல் நிலையில் மாற்றமில்லை

### மூர்ச்சை தெளியவில்லை

யாழ்ப்பாணம், திங்கள் மூதறிஞர் செல்வநாயகத்தின் உடல் நிலையில், இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை எவ்வித மாற்றமும் இல்லை. மூர்ச்சை இன்னும் தெளியவில்லை. டாக்டர்கள் தொடர்ந்து அருகிலிருந்து கண்காணித்துவருகின்றார்கள்.

மூதறிஞர் செல்வாவின் உடல் நிலைபற்றி நேற்றுப் பிற்பகல் வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கையில் "நிலையில் மாற்றம் இல்லை" என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தினமும் வைத்திய அத்தியட்சகர் மூதறிஞர் நிலைமைபற்றி அறிக்கை வெளியிட்டுவருகிறார்.

ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள பதிவுப் புத்தகத்தில் நேற்று நண்பகல் ஒரு மணி வரை 1827 பேர் கையெழுத்திட்டுள்ளனர். தொடர்ந்து மக்கள் கையெழுத்திட்டு வருகின்றனர்.

மூதறிஞர் செல்வாவுக்குத்

(8-ம் பக்கம் பார்க்)

# ஜெகஜீவனுக்கு பாதுகாப்பு அமைச்சு: ஏற்கச் சம்மதம்!

## ஜெயப்பிரகாஷின்கோரிக்கை மீது பதவியை ஏற்கிறார்

### அரசுக்கு எம். ஜி. ஆரும் ஆதரவு

**அமைச்சர் பதவியை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்துவந்த ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் அமைச்சர் பதவியை ஏற்க முன்வந்து, இன்று சத்தியப் பிரமாணம் எடுக்கவுள்ளார்.**

**ஜெயப்பிரகாஷ்நாராயண் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அவர்மீது கொண்டுள்ள மதிப்புக் காரணமாக அமைச்சர்பதவியை தாம்ஏற்க முடிவுசெய்திருப்பதாக திரு. ஜெகஜீவன்ராம் இன்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.**

தமது கட்சி ஜனதா கட்சியின் பாராளுமன்றக் குழுவில் ஓர் அங்கமாகச் செயற்படும் அதே வேளையில், அரசுக்கு வெளியில் தமது கட்சி தன்து தனித்துவத்தைப் பாதுகாக்கும் என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. ஜெகஜீவன்ராமுக்கு பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மந்திரிப் பதவியை ஏற்பதிலிருந்து ஒதுங்கியிருந்த சோஸலிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஜோர்ஜ் பெர்னண்டஸும், ராய்பரேலி தொகுதியில் இந்திரா காந்தியை தோற்கடிக்கச் செய்தவரான திரு. ராஜ்நாராயணும், ஜனநாயக காங்கிரஸ் செயலாளர் பஹுகுணவும் மந்திரிப்பதவிகளை ஏற்க முன்வந்துள்ளனர். இவர்கள் நால்வரும் இன்று மந்திரிகளாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வர்.

திரு. ஜகஜீவன்ராம் பாதுகாப்பு அமைச்சராகவும், திரு. ராஜ் நாராயண் சுகாதார அமைச்சராகவும், பெர்னன்டஸ் போக்குவரத்து அமைச்சராகவும், பஹுகுண விவசாய அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### அ அ.தி மு.க அரசுக்கு ஆதரவு

இது இப்படியிருக்க அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் அரசுடன் விசுவாசமாக நடக்க முன்வந்திருப்பதாக பிரதமர் மொரார்ஜி தேசாய் அறிவித்தார்.

பிரதமர் கூறியுள்ள இத்தகவலை அ.அ.தி.மு.க. தலைவர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் ஊர்ஜிதம் செய்தார். சென்னையில் பத்திரிகையாளர்கள் திரு.எம்.ஜி.ஆரைச் சந்தித்து புதுடில்லியில் நேற்றுக்காலை அ.அ.தி.மு.க வின் ஆதரவு பற்றி பிரதமர் மொரார்ஜி கூறியுள்ள தகவல் பற்றிக் கேட்டனர் அப்போது அவர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஜனதா அரசுக்கு அ.அ.தி.மு.க. ஆதரவு தெரிவிக்க முடிவு செய்திருப்பதாகசொன்னார்.

எதிர்க் கட்சியில் இருந்து கொண்டே அரசின் நடவடிக்கைகளுக்கு தமதுகட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜன. காங்கிரஸிலிருந்து விஜயலட்சுமி பண்டிட் விலகினார்

புதுடில்லி, மார்ச். 27 திருமதி விஜயலட்சுமி பண்டிட், திரு. ஜெகஜீவன்ராம் தலைமையிலான ஜனநாயகக் காங்கிரஸிலிருந்து விலகிக் கொண்டார்.

தாம் வேறெந்த ஒரு கட்சியுடனும் சேரப்போவதில்லையென்று தெரிவித்த திருமதி பண்டிட், ஜனதா கட்சியுடன் இணைந்து ஜனநாயககாங்கிரஸ் நாட்டு நலனுக்குப் பாடுபடும் என்ற நம்பிக்கையுடன் தான் தாம் அக்கட்சியில் சேர்ந்ததாகவும் ஆனால் தற்போதுஏற்பட்டுள்ள நிலை குறித்து மக்கள்மத்தியில் தப்பபிப்பிராயங்கள் எழுந்துள்ளதாகவும், கடந்த இருநாட்களுக்குள் உருவாகியுள்ள நிலைமையைச் சிலர் தமக்குச் சாதகமாகப்பயன்படுத்தப் பார்க்கிறார்கள் என்றும் கூறினார்.

"எம் நாட்டுக்குத்தேவையானது அமைதிதான். நாட்டுக்குள் மேலும் குழப்ப நிலையை உருவாக்கி மக்கள் பீதியடையும் நிலை இனிமேலும்ஏற்படக் கூடாது. ஐக்கியம் ஒன்றே எம் குறிக்கோளாக இருக்க வேண்டும்" என்று கூறினார் திருமதி பண்டிட்.

### சாவகச்சேரியில் ஜெர்மன் பிரதிநிதிகள்

மட்டுவில் ஞாயிறு.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைத்தூதுவராலயத்தைச் சேர்ந்த முதற் செயலாபர் செல்வி உர்சுலாமுல்லர், மற்றும் கலாநிதி பெர்லிஸ்ச், திருமதி கலாநிதி பெர்லிஸ்க் ஆகியோர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூலக கட்டிடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். (ஆ)

## "கட்சிகள் பலமடைந்தாலே கூட்டணி பலமடையும்"

### காங்கிரஸ் வா.மு.கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் உரை

யாழ்ப்பாணம், திங்கள் "தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பலப்படுத்த வேண்டுமானால் தமிழ்க்காங்கிரஸைப் பலப்படுத்தவேண்டும். அதற்குக் காங்கிரஸ் வாலிபமுன்னணி முழுமூச்சாக உழைக்கவேண்டும்."

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணிக் கமிட்டிக் கூட்டத்தில் பேசிய வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

காங்கிரஸ் நிர்வாகச் செயலாளரின் இல்லத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது;

"தமிழர்கூட்டணி ஒரு கட்சியல்ல. பல கட்சிகளும், இயக்கங்களும் சேர்ந்து அமைக்கப்பட்டதுதான் தமிழர்கூட்டணி. ஆதலால் கூட்டணி பலமாக இருக்கவேண்டுமானால் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் இயக்கங்களும் பலமாக இருக்கவேண்டும்.

கூட்டணிக்கு முழு ஒத்துழைப்பும் வழங்கி பலப்படுத்தவே கிராம ரீதியாக தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியைப் புனரமைப்புச் செய்து பலப்படுத்தி வருகிறோம்.

#### கடந்த தேர்தலில்

கடந்த தேர்தலில் ஒரு லட்சத்திற்கு மேலான மக்கள் தமிழ்க்காங்கிரஸிற்கு ஆதரவளித்தார்கள். கடந்த 7வருடகாலமாக் தமிழ்க்காங்கிரஸ் வாலிபர்களில் ஒரு சிலர் வேறு கட்சிக்குப் போனாலும் மற்

(8-ம் பக்கம் பார்க்க)

### வண்ணை ஆனந்தனும் சுகவீனம்

யாழ்ப்பாணம், திங்கள் சிறைமீண்ட வண்ணை ஆனந்தன், கடந்த 3 தினங்களாக வயிற்றோட்டத்தினாலும் கடும் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டு அவரின் இல்லத்தில் படுக்கையிலிருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த புதன்கிழமைக்குப் பின்னர் அவர் எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவில்லை. (க-அ)

## கவிஞர் காசி, மாவையை வி. பி. சந்தித்துப் பேசினார்

யாழ்ப்பாணம், திங்கள் கவிஞர் காசிஆனந்தன், திரு.வண்ணை ஆனந்தன், திரு. சத்தியசீலன், மாவை சேனாதிராஜா ஆகிய இளைஞர் பேரவைத் தலைவர்களை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரு மான திரு.வி.பொன்னம்பலம் சந்தித்துப் பேசினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் சிலருடன் இதற்குமுன் பேச்சுவார்த்தை நடத்திவந்த திரு.வி.பொன்னம்பலம் இப்போது தமிழ் இளைஞர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

திரு.வீ.பி.யின் முயற்சியினால் கொழும்பிலும் சமீபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் சிலரும் இடதுசாரிக் கட்சித்தலைவர்கள் சிலரும் சந்தித்துப் பேசினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் நோக்கங்கள், அவற்றின் பெறுபேறுகள் பற்றி அடுத்தமாதம் முதல் வாரத்தில் வெளிவரலாமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

## வரி விளம்பரம

### தேவை

பாண் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர் உடனடியாக தேவை. விபரங்களுக்கு: இலட்சுமி பேக்கரி, அச்சுவேலி. 5806

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்பொழுது லண்டன் நிரந்தர வசிப்பிடமாக உள்ள சிவில் இஞ்சினியர் இளைஞருக்கு பெண் தேவை. தொடர்பு முகவரி: S. S. Bavan, 15, Woodvile Road, London E 17, England. 5808

### காணவில்லை

கடந்த 25-3-77 வெள்ளிக்கிழமை காலை வழமைபோல் வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரிக்குச் சென்ற எனது 16 வயது மகன் ஜெகதீசன் இன்னும் வீடு திரும்பவில்லை. பொதுநிறம், உயரம் 5 அடி. கறுப்புக் களிசானும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். தயவு செய்து எனது மகனைக் கண்டுபிடித்து உதவுங்கள். செல்லப்பா லட்சுமணபிள்ளை, வைத்தியர், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. 5809

## விளம்பரம்

நகரசபை
பருத்தித்துறை

### நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 12-4-77-ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்டவர் ரூ. 500/- காசுப்பிணை செலுத்திய உடன் நியமனம் செய்யப்படுவர். வேதனம் முதலிய விபரங்களை கந்தோரில் அறிந்து கொள்க.

ந. நடராசா,
தலைவர்,
நகரசபை,
பருத்தித்துறை.

பருத்தித்துறை,
24-3-77 5802

## கழிவு நூல் விற்பனை

எமது மின்தறி நிலையத்தில் எழுநூறு (700) இருத்தல் கழிவு நூல் முத்திரையொட்டப்பட்ட (சீல்) கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றது. கேள்விப் பத்திரங்களைச் சங்கக் காரியாலயத்தில் வேலை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். முடிவு திகதி 1-4-77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியாகும்.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்.
தெல்லிப்பழை.

5807


## இன்று

வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி ஆலய மகோற்சவ 13ம் நாளாகிய இன்று மாலை 6மணி முதல் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிகஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள் திருவிளையாடற்புராண தொடர்விரிவுரையும் இரவு 7 30 க்கு பூஜையாகி விநாயகர் பார்வதிபரமசிவன் முருகன் மூஷிகம் அன்னம் மயில் வாகனத்தில் திருவுலாக் காட்சியும் நிகழும். (அ)


மலேஷியன் கை மார்க்

**சாம்பிராணி**

கிடைக்குமிடம்:

சென்ற் அந்தனிஸ்
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
லிமிட்டெட்,
கொழும்பு-10
போன்: 24261—5.


யாழ். பழையபூங்கா கொள்ளை:

# 2-ம் எதிரிக்கு 2 வருட கடூழியம்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணபழைய பூங்கா கொள்ளை வழக்கில் 2-ம் எதிரிக்கு, 5வருடம் ஒத்திவைக்கப்பட்ட 2 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில், நீதிபதி எம்.எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கையாழ்பழையபூங்காவில், 27,417 ரூபாவைக் கொள்ளையடித்ததாக, சபாரத்தினம், துரைராசா சகாயராசா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். யோகநாதன் ஆஜரானார் 1-ம்எதிரி சார்பில் எவரும் ஆஜராகவில்லை. அரச சட்டத்தரணி ஸ்ரீ ரஞ்சன் வழக்கைநடாத்தினர்.

2-ம் எதிரி குற்றத்தைஒப்புக் கொண்டார். 3-ம் எதிரி மீதான குற்றச்சாட்டை அரச சட்டத்தரணி வாபஸ்பெற்றார் 1-ம் எதிரி குற்றவாளியாகக் காணப்பட்டார்.

1-ம் எதிரிபற்றிய கைவிரல் அடையாளஅறிக்கை கிடைக்காததனால் தீர்ப்பு வழங்குவது பின் போடப்பட்டுள்ளது.

# லஞ்ச வழக்கில் சப்-இன்ஸ்பெக்டர் விடுதலை

கொழும்பு, ஞாயிறு

லஞ்ச வழக்கு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கொழும்பு விசேட லஞ்ச விசாரணை நீதிமன்ற நீதிபதி திரு. சி. மனோகராவினால் விடுதலைசெய்யப்பட்டார்.

இங்கிரியாப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த டி. எம். தயரத்ன என்ற பிரஸ்தாப சப்-இன்ஸ்பெக்டர் டபிள்யூ. ஏ. சிறிவர்த்தன என்பவரிடம் இருந்து வழக்கொன்றில் சிக்கியிருந்த அவரது உறவினரான சிறிபால என்பவரைத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதாகக் கூறி 150 ரூபாவைப் பெற்றுக்கொண்டாரென்றுகுற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகமில்லாதவகையில் நிரூபிக்கப்படவில்லையெனக் கூறி எதிரியை நீதிபதி விடுதலை செய்தார். (உ)

கொட்டாஞ்சேனை

# தவறணைக் கொள்ளை சந்தேகநபர்கள் றிமாண்டில்

கொழும்பு, ஞாயிறு

கொட்டாஞ்சேனை சாராயத் தவறணைக் கொள்ளைச் சம்சவம் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட இரு சந்தேக நபர்கள் ஏப்பிரல் 4-ந் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைத்துப்பாக்கிகள். கத்திகள் சகிதம் சம்பவதினம் தவறணைக்குள் புகுந்த சந்தேகநபர்கள் தவறணை மனேஜர் எம். ஏ. ராஜேந்திராவிடம் இருந்து 26 ஆயிரத்து 167 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றிருந்தனராம்.

எஸ். ஏ. ரத்னசிறி சொய்ஸா, லயனல் குணவர்த்தன என்ற மேற்படி இரு சந்தேக நபர்களையும் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஜனாப் யு. எல். எம். பாரூக் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது ஆறு சாட்சிகள் அடையாளம் காட்டினர்.

இவர்களை மேற்படி திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் திரு. ரி. சுந்தரலிங்கம் உத்தரவிட்டார். (உ)

## கள்ளக்கடத்தல் ஜவுளி சிக்கியது

அனுராதபுரம், ஞாயிறு

கெக்கிராவையிலுள்ள பிடவைக்கடையொன்றில் திடீர் சோதனை நடத்திய கெக்கிராவ பொலிசார், அங்கிருந்து 50,000 ரூபா பெறுமதிமிக்க கள்ளக்கடத்தல் ஜவுளிகளைக் கைப்பற்றினர்.

அனுராதபுரம் அரசாங்க அதிபர் பிரஸ்தாப கடைக்காரருக்கு 5000 ரூபா அபராதம் விதித்ததுடன் கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிட்டார் [உ]



புத்தொளியின் ''தமிழர் தலைமகன் ஜி. ஜி.'' என்ற நூலின் முதற்பிரதியை யாழ். உலோகத் தொழிற்சாலை அதிபர் திரு. தா. திருநாவுக்கரசு பெற்றுக்கொண்டபோது எடுத்தபடம்.

# ''ஆட்சிமன்றத்தை உடன் கலைத்து விடுங்கள்'' கவர்னரிடம் காஷ்மீர் முதலமைச்சர் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 27

ஜம்மு—காஷ்மீர் ஆட்சிமன்றத்தை உடனடியாகக் கலைக்குமாறு காஷ்மீர் முதலமைச்சர் ஜனாப் ஷேக்அப்துல்லா மாநில கவர்னரைக் கோரியுள்ளார்,

திருமதி இந்திராகாந்தியின் காங்கிரஸ் கட்சி அதன் ஆதரவை அளிக்க மறுத்ததனையடுத்து ஷேக்கின் காஷ்மீர் அரசு கவிழும் அறிகுறிகள் ஏற்பட்டிருந்தன.

காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் 1975-ம் ஆண்டுமுதல் ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக இருந்துவரும் ஜனாப் ஷேக் (வயது 71) சமீபத்திய தேர்தலில் வெற்றியீட்டினர்.

தேர்தலின்போது தமக்கு எதிராக இவர் நடந்துகொண்டார் என்று காங்கிரஸார் குறைகூறினர்.

ஜனாப் ஷேக் கவர்னருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் ஆட்சிமன்றத்தைக் கலைக்குமாறு ஆலோசனை கூறியுள்ளார்.

காங்கிரஸ்கட்சி தனது ஆதரவை நிறுத்தப்போவது பற்றி தமக்கு எதுவும்அறிவிக்கவில்லையென்றும் மாநில கவர்னர் மூலமாகவே தாம் இதுபற்றி அறிந்து கொண்டதாகவும் ஜனாப் ஷேக் தெரிவித்துள்ளார். (உ)

## புகார்

கிளிநொச்சி, ஞாயிறு

காணிச்சீர்திருத்தச்சட்டத்தினால் சுவீகரிக்கப்பட்ட பளை தென்னங்காணிகளுக்கான காணிக்கச்சேரி கடந்தவருடம் நடைபெற்று துணுக்காயில் 50 வாலிபர் தெரிவாகி இருந்தனராம். காணி வழங்கும் நாள் அறிவிக்கப்படும் என்று காணிக்கு தெரிவுசெய்யப்பட்டோருக்கு கூறப்பட்டதாம்.

ஆனால் திடீரென காணிகள் ரத்தாகி வேறு காணிக்கச்சேரி நடைபெற உள்ளதாக இதற்கு சமூகமளிக்கும் கடிதம் கிடைத்துள்ளதாம்.

இதுதொடர்பாக துணுக்காய் இளைஞர்கள் மேலிடத்திற்கும் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரிக்கும் புகார் கூறியுள்ளனர். (உ)

## திருமேனிக் குடமுழுக்கு

கண்டி, ஞாயிறு

பேராதனை வளாக குறிஞ்சிக் குமரன் கோயில் திருத்த மண்டபத்தில் ஏப்ரல் மாதம் 4-ம் திகதி நடைபெறவிருக்கும் நடராஜர் சிவகாமி அம்மன் மாணிக்கவாசகர் திருமேனிக் குடமுழுக்கு உற்சவத்தையொட்டி சிறப்புநிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கின்றன.

பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. சி. தில்லைநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

''இந்துதருமம்'' என்னும் மலர் வெளியீடும் பட்டமளித்தல் முதலான நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ)

# ''பாட்டாளிகள் தலைமையிலேயே உண்மையான ஐ. மு. உருவாக முடியும்''

## ஹட்டனில் 'சண்' பேச்சு

ஹட்டன். ஞாயிறு

''எமது முதல் கடமை சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதல்ல. நவகாலனித்துவத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் அழித்தொழிப்பதே எமது முதல் கடமையாகும். எனவே இவ்விரு எதிரிகளுக்கு எதிராக சேரக்கூடிய சகல சக்திகளையும் ஐக்கியப்படுத்தவேண்டும்'' என்று புதிய செங்கொடிச் சங்கத் தலைவரும், இலங்கைக் கம்யூனிஸ்ட் (சீனசார்பு) கட்சிப் பொதுச்செயலாளருமான திரு. என். சண்முகதாசன் கூறினர்.

புதிய செங்கொடிச் சங்கத்தின் ஹட்டன் மாநிலக் காரியாலயத்தில் அதன் உபசெயலாளர் திரு, கே. சுப்பையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது :-

947-ம் வருடத்தின் பின் ஒரு இந்திய வம்சாவழிப் பிரதிநிதியை ஆட்சி மன்றத்து அனுப்பமுடியாமற் போய்விட்டதன்றும், வாக்குரிமை இழந்து மீண்டும் பெறப்பட்டுள்ளதென்றும், ஆகவே இந்திய வம்சாவழித் தோட்டத்தொழிலாளர்கள் ஒருங்கு சேர்ந்து தங்கள் பிரதிநிதியொருவரை இம்முறை பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டுமென்றும் பல்வேறு தோட்டத் தொழிற்சங்கங்கள் இன்றுதீவிரமாகப் பிரசாரம் மேற்கொண்டுவருகின்றன.

''1952-ம் ஆண்டுக்குப் பின்பும் ஒன்றோ இரண்டோ இந்திய வம்சாவழிப் பிரதிநிதிகள் நியமன அங்கத்தவர்களாக எப்பொழுதும் இருந்து வந்திருக்கின்றார்கள். இப்பொழுதும் இருந்துவருகின்றார்கள்— என்னும் உண்மையை இவர்கள் மறந்துவிடுகின்றார்கள். ஆனாலும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளுக்கு விமோசனம் காணப்படவில்லை சுரண்டுபவர்கள் வெள்ளையர்களுக்குப் பதிலாக கறுத்தவர்களாக மாறியுள்ளார்களே யொழிய சுரண்டல்முறைமாற்றப்படவில்லை.

ஆட்சிமன்றத்தில் ஆசனங்களைப் பெறுவதின் மூலமாக எதையும் சாதிக்கமுடியாது. இலங்கை மக்கள் பத்துத் தடவை தங்கள் வாக்குப் பலத்தைப் பாவித்து, பல படித்த மேதாவிகளை ஆட்சிமன்றத்துக்கு அனுப்பியும் மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் இன்றுவரை தீர்க்கப்படாமலே உள்ளன.

''1970-ல் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அடிபணிந்து தொழிலாளி, விவசாயிகளின் நலன்களை முதலாளித்துவத்திற்கு அடகுவைத்த சமசமாஜக் கட்சியினர், இன்று அதே சுதந்திரக் கட்சிக்கெதிராக ஒரு சோஷலிஸ ஐக்கிய முன்னணியை நிறுவ முன்வந்திருக்கின்றனர். இதிலுள்ளபெரிய தவறு என்னவெனில் இலங்கைக்கு இன்றுதேவைப்படுவது சோஷலிஸ முன்னணியல்ல. சமசமாஜக் கட்சியினர் தேர்தலுக்காகவே ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கப் பார்க்கின்றனர். ஆட்சிமன்றத்தின் மூலமாக சமுதாயத்தை புர

(7-ம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவையில் ஜெகஜீவன் பகுகுணு சேர்வார்களா?

## சாந்திபூஷன்: நீதி, சட்ட அமைச்சர்; ராஜ்நாராயண் .இன்று பதவியேற்பு

புதுடில்லி, மார்ச் 27

அலஹாபாத் நீதிமன்றத்தில் ரேபரேலித் தொகுதியில் திருமதி இந்திராகாந்திக்கு எதிரான தேர்தல் வழக்கில் திரு. ராஜ்நாராயணுக்கு சார்பாகப் பேசி ஜெயித்த வழக்கறிஞர் திரு. சாந்திபூஷனுக்கு பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தமது மந்திரிசபையில் நீதி. சட்டத்துறை அமைச்சுக்களை அளித்துள்ளார்.

ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமும் செயலாளர் பஹுகுணுவும் அமைச்சர்களாகப் பதவியேற்கவில்லை. ஆனாலும் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண்விடுத்துள்ளவேண்டுகோளைத் தொடர்ந்து அவர்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைபற்றி இன்று முடிவு தெரியலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ராஜ்நாராயண் திங்கட்கிழமை அமைச்சர் பதவியேற்பார்.

திரு. பட்டேல்-நிதியமைச்சராகவும், திரு. பட்நாயக்- எஃகு அமைச்சராகவும், திரு. பி. இராமச்சந்திரன்- சக்தித்துறை அமைச்சராகவும், திரு. சரண்சிங்- உள்துறை அமைச்சராகவும், திரு. வாஜ்பாயி- வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதமர் திரு. தேசாய் உட்பட மந்திரிசபையில்மொத்தம் 15 மந்திரிகள் உள்ளனர்.

திரு. அட்வாணிக்கு தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் பதவியை திரு. தேசாய் அளித்துள்ளார்.

### மந்திரிசபையின் முதலாவது கூட்டம்

புதிய மந்திரி சபையின் முதலாது கூட்டம் நேற்று சுமார் 90 நிமிடங்கள்வரை நடைபெற்றது. பிரதமர் பதவியுடன் பாதுகாப்பு, விவசாய கைத்தொழில் துறை அமைச்சுக்களின் பொறுப்புகளையும் திரு. தேசாயே ஏற்றுள்ளார்.

திரு. தேசாய் பிரதமராக நியமனம் பெற்றதையடுத்து சோஷலிஸ்ட் பிரமுகர் திரு. ராம்தான் ஜனதா கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

### சமரசமுயற்சியில் ஜெயப்பிரகாஷ்

ஜனதா—ஜனநாயக காங்கிரஸ் பிளவைத் தீர்த்துவைக்கும் முயற்சியில் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தீவிரம் காட்டிவருகிறார்.

ஜெகஜீவன்ராமும், பஹுகுணுவும் அமைச்சரவையில் இடம்பெறவேண்டியதன் அவசியம் குறித்து திரு. நாராயண் ஜனதா கட்சிச் செயலாளர் திரு. சந்திரசேகர் ஊடாக செய்தி ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

தமது கட்சி திரு. நாராயணின் சமரஸ முயற்சி குறித்துஆராயும்பொருட்டு தேசிய செயல் குழுக் கூட்டத்தையும், பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தையும் கூட்டும் என்று ஜனநாயக காங்கிரஸ் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

### காஷ்மீரில் கலகம்

இதேவேளை காஷ்மீரில் பிரதமர் ஷேக் அப்துல்லாவின் ஆதரவாளர்களுக்கும், காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே கலகம் மூண்டுள்ளதாகவும் அங்கு வன்செயல்கள் தலைதூக்கியுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### பஞ்சாப் தொகுதியில் மீண்டும் வாக்கெடுப்பு

பஞ்சாப்பில் உள்ள தொகுதி ஒன்றில் 16-ம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பின் போது வாக்குச் சீட்டுக்கள் எரிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட புகாரையடுத்து மீண்டும்அங்கு வாக்களிப்பு நடைபெறவிருக்கிறது. அங்கு அறுவர்போட்டியிடவிருக்கின்றனர்.

## கடல் பிராணிகள் பூங்கா

புதுடில்லி, மார்ச் 27

மன்னார்வளைகுடாவில் கடற் பிராணிகளின் தேசிய கலைப் பூங்காவொன்று அமைக்கப் படும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

இப் பகுதியில் காணப்படும் குட்டிபோட்டு பாலூட்டும் கடற் பிராணிகள் இந்தப் பூங்காவில் பேணிவளர்க்கப் படும் என்று தெரிகின்றது.

## இப்படியும் ஓர் உழைப்பு?

### ஒருவர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

பாஸ்போட் திருட்டில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்.பொலிசார் வாலிபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த சிங்காரவேலு என்பவரது பாஸ்போட் புகையிரதத்தில் தொலைந்துவிட்டதாம்.

அதனை ஒருவர் வைத்திருப்பதாகவும் 150 ரூபா கொடுத்தால் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் சந்தேகநபரான குகானந்தன் என்பவர் சிங்காரவேலுவிடம் கூறினாராம்.

இது பற்றிச்செய்துகொள்ளப் பட்ட புகாரையடுத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

......

## குருநகர் த. இ. பேரவை அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

குருநகர் தமிழ் இளைஞர் பேரவைக்கூட்டம் அதன் அமைப்பாளர் திரு. கி.கிறிஸ்ரியன் தலைமையில் கூடியபோது அண்மையில் மறைந்த தமிழ்ப் பெரியார்கள் ஜி.ஜி. பொன்னம்பலம்,எம். திருச்செல்வம் ஆகியோருக்கு இருநிமிட மௌனம் அனுஷ்டித்தனர்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர். தலைவர்:கி.கிறிஸ்ரியன், செயலாளர்: வெ.ராஜகுமார், பொருளாளர் ஜே. அன்ரனி, அமைப்பாளர்கள்; யே. ராஜன்,யோகி, அன்ரனி.

# பத்திரிகைகளின் கடமை என்ன?

## பாரதப் பிரதமர் சொல்கிறார்

புதுடில்லி, மார்ச். 27

''பத்திரிகைகள் சுயேச்சையாக இயங்க வேண்டும். அரசாங்கத்திற்கு சார்பான செய்திகளைப் பிரசுரிப்பதிலும் பார்க்க தேசிய வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் பற்றிய செய்திகளுக்கு பத்திரிகைகள் முக்கியத்துவமளிக்க வேண்டும்'' என்று பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கூறியுள்ளார்.

நேற்றிரவு பத்திரிகைநிருபர்களுக்கு திரு. தேசாய் அளித்த பேட்டியொன்றிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

திரு. தேசாய் மேலும் கூறியதாவது:''ஜனநாயககாங்கிரஸ் கட்சிக்கும் ஜனதாகட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சில கருத்துவேறுபாடுகள் சுமுகமாகத் தீர்ந்துவிடும். அமைச்சரவையில் ஜனநாயக காங்கிரஸார் இடம்பெறுவதில்ஏற்பட்டுள்ள காலதாமதம் சில குழப்

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜெயப்பிரகாஷ் உடல்நிலை திருப்தி

பம்பாய், மார்ச் 27

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இங்கு சிகிச்சைபெற்று வரும் மருத்துவமனையில் திருப்திகரமான உடல்நிலையுடன்இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று அவருக்கு செய்யப்பட்ட சந்திரசிகிச்சை ஒன்று வெற்றிகரமாக முடிந்தது என்றும் அவர் கடந்த இரவு நிம்மதியாக உறங்கினார் என்றும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

# கொங்கோவில்மாஜிஜனாதிபதி உட்பட அறுவருக்கு தூக்கு

லண்டன்,மார்ச் 27

கொங்கோ ஜனாதிபதி மரிஸம் என்கோபே, கொங்கோ மேற்றிராணியார் படுகொலைகள் தொடர்பாக கைதாகிய மாஜி ஜனாதிபதி கூல்பா உட்பட அறுவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதியைக் கொலைசெய்வதற்கு ஏற்கனவே திட்டம் திட்டப்பட்டிருந்ததாக பிரஸ்தாப மாஜி ஜனாதிபதி ஒப்புக்கொண்டதனையடுத்து மேற்படி அறுவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். (உ)

பாக். எதிர்க்கட்சிகள்

## பாராளுமன்ற கூட்டத் தொடரை பகிஷ்கரித்தன

இஸ்லாமாபாத், மார்ச். 27

புதிய பாகிஸ்தான் அரசாங்கத்தின் முதலாவது பாராளுமன்றக்கூட்டத்தொடர்நேற்று ஆரம்பமானபோது அதனை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தனர்!

அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தல் நீதியான முறையில் நடாத்தப்படவில்லையென்றும் பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் ஜுல்பிகார் அலி பூட்டோ தமதுபதவியை ராஜினாமாச் செய்யவேண்டுமென்று கோரி எதிர்க்கட்சிகள் பெரும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியதும் இதனால் ஏற்பட்ட குழப்பநிலையால் 150க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர் என்பது தெரிந்ததே. (உ)

ஆபிரிக்க நாடுகளின்

## வளர்ச்சிக்கு சோவியத் யூனியன் உதவும்

லுசாக்கா, மார்ச் 27

ஆபிரிக்க நாடுகளின் முன்னேற்றத்திற்கு இனவாதம், குடியேற்றவாதம், பாஸிசவாதம் என்பன தடையாக இருப்பதால் ஆபிரிக்க நாடுகளுக்கு ஆயுத உதவி அவசியம் தேவையென்று ஸாம்பிய ஜனாதிபதி கெனத் கவுண்டா கூறியுள்ளார்.

தற்போது ஸாம்பியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள சோவியத் யூனியன் ஜனாதிபதி திரு. பட்கோர்னியிடம் கெனத்கௌண்டா தமது மேற்படி கருத்தை வெளியிட்டார்.

ஆபிரிக்க நாடுகளின் சமாதானத்துக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் சோவியத்யூனியன் ஓயாது உழைப்பதோடு உதவியுமளிக்கும் என்றுசோவியத் யூனியன் ஜனாதிபதி உறுதியளித்தார்.

சோவியத்யூனியன் ஜனாதிபதி நாளை ரொடீஷியாவுக்கு விஜயம்செய்து ரொடீஷிய தேசியவாதத் தலைவர்களைச் சந்திப்பார். (உ)


மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியானல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமற் எல்.சி 50%

மேற்கு ஜேர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுன்னி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

- நெல்
- புகையிலை
- காய்கறி
- பயறுவகை
- உருளைக்கிழங்கு
- போஞ்சிவகை
- பூஞ்செடி
- தோப்பி
- திராட்சை
- தோடை
- பருத்தி
- வெங்காயம்

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்,

பொலிமற் உடன் செந்நகம் கலக்கப்படாது பயிர்களை பாதுகாக்க தாமதியாது பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரேட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Assauw Designs

### மணிவாக்கு

கண்களுக்கு அருகிலுள்ள சில தூசி உலகம் முழுவதையும் மறைத்துவிட்டுத் தன்னை மட்டுமே காண இடம்கொடுக்கும். "நான்" என்பதைப்போல எனக்குத் தொந்தரவு கொடுக்கும் தூசி வேறு அறியேன்.

—ஜோர்ஜ் எலியட்

ஈழநாடு
THE EELANADU

# நிருவாகசேவை

இலங்கை நிருவாக சேவையின் இரண்டாந்தரத்துக்கான பதவிஉயர்வுகள் பாரபட்சமான முறையில் வழங்கப்பட்டிருப்பதாக இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகள்சங்கம் பிரதமரிடம் முறையிட்டிருக்கிறது.

நிருவாகசேவையில் கடந்த பதின்மூன்று வருடங்களுக்குமேலாக சேவையாற்றி எதுவித பதவியுயர்வுமின்றியிருக்கும் மூன்றாந்தர அதிகாரிகளின் குறைபாடுகளை அறிந்து நிவாரணம் வழங்குமாறு சங்கம் ஒரு மகஜர் மூலம் பிரதமரைக் கேட்டிருக்கிறது.

சேவையில் சேர்ந்து ஐந்து வருடங்கள்தானும் பூர்த்தியடையாதவர்கள் பதவி உயர்வுபெற, நாட்டுப்புறங்களில் பத்துப் பதினைந்து வருடங்களாகக் கடமையாற்றி எதுவித சலுகைகளையும் அனுபவிக்கமுடியாத நிலையில் உள்ள பழைய அதிகாரிகள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே விடப்பட்டிருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க இந்தப்பதவி உயர்வில் இன ஒதுக்கல் கொள்கையும் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தகுதியான பலர் இருந்தும் ஒரு முஸ்லிமுக்குக்கூடப்பதவிஉயர்வு வழங்கப்படாததுடன் தமிழர்களில் மூவருக்கு மட்டுமே பதவிஉயர்வு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

எந்தக்கட்சி ஆட்சிக்குவந்தாலும் அந்த அரசு வகுக்கும் கொள்கைகளையும் திட்டங்களையும் செயல்படுத்தும் பொறுப்பு நிருவாக சேவையையே சார்ந்ததாகும்.

நிருவாகசேவை திருப்தியோடு இயங்கினால்தான் அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும்செயல்படுத்துவது சுலபமாகஇருக்கும்.

சேவைமூப்பை மட்டும் கணித்துப் பதவிஉயர்வு வழங்கப்பட்டால் திறமைக்கு இடமில்லாது போகலாம் என்று சொல்லலாம்.

பரீட்சை வைத்துப்பதவி உயர்வு வழங்குவது சேவையுடன் திறமைக்கும் இடமளிப்பதாகும். இதுவே நடைமுறையிலிருந்துவரும் முறையுமாகும்.

ஆனால் இலங்கைநிருவாக சேவையின் இரண்டாந்தரப் பதவிகளுக்கு மூன்றும் தரத்தில் கடமையாற்றுவோர் மத்தியில் நடந்த பரீட்சை முன்னுக்குப்பின் முரணான முறையில் நடைபெற்றிருப்பதாகவும் சேவையிலுள்ள குறிப்பிட்ட ஒரு சிலர் பயனடையக்கூடிய முறையில் அவர்களுக்குப் பரிட்சயமான நிறுவனச் செயல் விதி முறைகளிலேயே கேள்விகள் தயாரிக்கப்பட்டிருந்தன வென்றும் இதனால் பலர் பாதிக்கப்பட்டார்களென்றும் நிருவாகசேவை அதிகாரிகள் சங்கம் தனது மகஜரில் எடுத்துக்கூறியிருப்பது ஆராயப்படவேண்டிய விஷயம்.

சுலபமாகப் பதவிஉயர்வு பெறமுடியுமென்ற மனப்பான்மை ஏற்பட்டுவிட்டால் கடின உழைப்புக்கும் திறமைக்கும் இடமில்லாது போய்விடும்.

அறிவுக்கும் ஆற்றலுக்கும் உழைப்புக்கும் இடமில்லாமல் எதிலும்கட்சிஅரசியலுக்கு இடமளிக்கப்பட்டால் நாட்டின் முன்னேற்றம் பின்தங்கிவிடும்.

நிருவாகசேவைப் பதவி உயர்வில் இனஒதுக்கல் கொள்கை பின்பற்றப்பட்டிருக்கிறதென்ற குற்றச்சாட்டு சாதாரண விஷயமல்ல.

'மூளைசாலிகள்' வெளியேறுவதற்கு இவைதான் முக்கிய காரணங்களாக அமைகின்றன.

ஜனத்தொகை விகிதாசாரப்படிதான் நியமனங்களும் பதவி உயர்வுகளும் வழங்கப்படுவதானாலும்கூட, சிறுபான்மையினருக்கு போதிய இடம் அளிக்கப்படவில்லை என்ற குறை இருந்து வருகிறது.

சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு நியாயமான முறையில் நிரந்தரத்தீர்வு காணவேண்டுமென்று பிரதமர் முயற்சிசெய்து வருகிறார்.

தமிழ்ப்பேசும் பிரதிநிதிகளை அழைத்துப் பேசியதுடன் தமிழர்விடுதலைக்கூட்டணித்தலைவர்களையும் இரண்டுதடவைகள் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

தேசிய ஒற்றுமையை உருவாக்கி நாட்டின் அமைதியைப்பாதுகாத்து நாட்டை முன்னேற்றுவதே பிரதமரின் நோக்கமாகும்

இச்சமயத்தில் நியமனங்களிலும், பதவி உயர்வுகளிலும் பாகுபாடு காட்டப்படுவதாகக் கூறப்படும் புகார் பிரதமரது முயற்சிக்கு மாறானதாகும்.

சுகாதார சேவை டைரக்டர் பதவியிலிருக்கும் டாக்டர் எஸ். டி. எம். பெர்னன்டோ இரண்டுமாதங்களுக்கு முன்பே ஓய்வுபெற்றிருக்கவேண்டும்.

அவரது இடத்துக்கு அவருக்கு அடுத்தபடியாகஉள்ள டாக்டர் ஹேர்பர்ட் ஜேசுதாசன்நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் மூன்றாவது மாதமாகவும் டாக்டர் பெர்னன்டோவுக்கு சேவைக் காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஜேசுதாசனுக்கு சுகாதாரசேவை டைரக்டர் பதவிவழங்குவதற்குத் தயக்கம்..!

இலங்கை நிருவாகசேவை அதிகாரிகள் சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரில் கூறப்பட்டுள்ள குறைகளை காலதாமதமின்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வரவேண்டும். தேசிய ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு பதவிஉயர்வில் சிறுபான்மையினருக்குப் பாகுபாடுகாட்டப்படுகின்றதென்ற புகார்பற்றிப் பிரதமர் உடன் கவனம்செலுத்துவதும் அவசியமாகும்.

# பரம்பரை சித்தவைத்தியரை பதிவுசெய்தல்

-வைத்தியகலாநிதி என். கந்தையா-
(வைத்திய அதிகாரி, கைதடி ஆயுள்வேதக் கல்லூரி)

அரசாங்கம் பரம்பரை சித்த ஆயுள்வேத வைத்தியர்களை மீண்டும் பதிவுசெய்ய முடிவு செய்துள்ளது. இதன்பேறாக பல நூற்றுக்கான சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் பதிவுசெய்த வைத்தியர்களாக தொழில்புரிய ஓர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

பல தமிழ்பேசும் மக்களிடையேயுள்ள பரம்பரை சித்தவைத்தியர்கள் இதன் மூலம் பலனடைவார்களென எதிர்பார்க்கும் அதேவேளையில் ஆங்காங்கே பரவியிருக்கும் சிறந்த சித்தமருந்துகளும் இதன்மூலமாக வெளிவர வாய்ப்பேற்படும். இதுகாலவரையும் வைத்தியம்செய்து கொண்டிருக்கும் சிறந்த சித்த வைத்தியர்கள் அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்டு தாங்களும் ஓர் பூரண பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் எனத் தொழில்புரிவதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாக இருக்கும். இதன்காரணமாக அரசாங்கமும் சித்தஆயுள்வேத வைத்தியத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கின்றதென்பதை அறியலாம்.

பல ஆண்டுகளாகத் தடைப்பட்டிருந்த பதிவு மீண்டும் வருவதால் சிறந்த தகுதியுள்ள சித்தவைத்தியர்கள் இதனைத் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் சாலச்சிறந்தது.

இப் பரீட்சை இருவிதமாக இருக்கும்.

(1) எழுத்துப் பரீட்சை.
(2) வாய்மொழிப்பரீட்சை.

இப் பரீட்சைகள் இரண்டும் பொதுவைத்தியர்களுக்கும் விசேட வைத்தியர்களுக்கும் பொருந்தும்.

விசேட வைத்தியம் கீழ்க்கண்டவைகளுக்கு நடாத்தப்படும்.

(1) சர்ப்ப விஷவைத்தியம்,
(2) விசர்நாய் கடி வைத்தியம்.
(3) முறிவு வைத்தியம்.
(4) கட்டிகள் பிளவைகள் வைத்தியம்.
(5) சுடுபுண் வைத்தியம்.
(6) அக்கினிப்புண் வைத்யம்,
(7) கண் வைத்தியம்.
(8) மூளை வைத்தியம்.
(9) சர்மரோக வைத்தியம்.

பொது வைத்தியர்களாகப் பதிவுசெய்தல்.

(1) 23 வயதைப் பூர்த்தியடைந்தபின்னர் ஆகக்குறைந்தது 10 வருடகாலம் தொழில் புரிந்த வைத்தியர்கள்.

(2) 1976-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி 50 வயதைப் பூர்த்திசெய்து அபின் உத்தரவுப் பத்திரம் பெற்றுள்ள பொதுவைத்தியர்கள். இவர்கள் வாய்மொழிப் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்தால் பொதுவைத்தியர்களாக பதிவுசெய்யப்படுவார்கள்.

(3) வயது 23 பூர்த்தி செய்தபின்னர் ஆகக்குறைந்தது 5 வருடங்களாக பொது வைத்தியர்களாக தொழில் புரிபவர்கள் எழுத்துப்பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் நடக்கும் வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தியடைந்தால் பதிவுசெய்யப்பெறுவர்.

(4) விசேட வைத்தியர்களாக பதிவுசெய்யப்பட்ட பின் ஆகக்குறைந்தது ஏழு வருடங்கள் வைத்தியம்செய்த வைத்தியர்கள் பொதுவைத்தியராக பதிவுசெய்துகொள்ள விரும்பின் எழுத்துப்பரீட்சையிலும் பின்வாய் மொழிப் பரீட்சையிலும் சித்திபெற வேண்டும்.

விசேட வைத்தியர்களாகப் பதிவுசெய்தல்.

(1) 22 வயதைப் பூர்த்தி செய்தபின்னர் - ஆகக்குறைந்தது ஏழு வருடங்களாக குறிப்பிடும் விசேடவைத்தியம் செய்பவர்கள் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடையின் பதிவு செய்யப்படுவர்.

(2) 21 வயதைப் பூர்த்தி செய்து பின் ஆகக்குறைந்தது 4 வருடங்கள் குறிப்பிடப்பட்ட வைத்தியம் செய்பவர்கள் எழுத்துப் பரீட்சையிலும் பின் வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தியடையின் பதிவு செய்யப்படுவர்.

அன்றியும் எழுத்துப்பரீட்சையில் நான்கு பாடங்களில் பரீட்சிக்கப்படும்.

(1) மூலதர்மம் [சித்த]
(2) சித்த திரவிய விஞ்ஞானம்.
(3) ரோக விஞ்ஞானம்.
(4) சிகிச்சா விஞ்ஞானம்.

இதேபோல் வாய்மொழிப் பரீட்சையிலும் பரீட்சிக்கப்படும்.

பாரம்பரிய பரம்பரை வைத்தியர்கள் மேற்கண்ட விஷயங்களைச் சரிவரப் புரிந்துகொண்டு பதிவுசெய்யப்பட்ட வைத்தியர்களாக தொழில் புரிந்தால் போலி வைத்தியர்களைத் தடுக்கமுடியும்.

(7-ம் பக்கம் பார்க்க)

ஆயுள்வேத அபிவிருத்திக்கு

## உலகஸ்தாபன ஆதரவு

ஆசிய நாடுகளில் அந்நாட்டு மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு வகை தந்த மருத்துவ முறைகள் கடந்த நூற்றாண்டில் கவனிப்பாரற்றுப் போன நிலையை மாற்றி அதன் அபிவிருத்திக்கு உதவ உலக சுகாதார நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்நிறுவனத்தின் ஆதரவில் ஆசிய பிராந்தியத்தில் ஓர் மத்திய நிறுவனமும் ஓர் சபையும் அமைக்கப்படவுள்ளன. ஆயுள்வேத மத்திய அலுவலகம் இலங்கையில் அமைக்கப்படவிருப்பதுடன் சபை அமைப்பு, வேலைத்திட்டம் முதலியவற்றை ஆலோசனை செய்வதற்கு உலக சுகாதார நிறுவனம் 18 பேர் கொண்ட குழுவினை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடாகியுள்ளது.

அக்குழுவினர் எதிர்வரும் ஏப்ரில் முதல்வாரத்தில் இலங்கையில் தங்கி இந்நாட்டு மருத்துவர்களுடன் கலந்து ஆலோசிப்பார்கள். சுகாதார அமைச்சு இதற்கான பூர்வாங்ககூட்டத்தைச் சென்ற 22-ம் திகதி நடத்தியது.

நாட்டின் பலபாகங்களிலிருந்தும் ஆயுள்வேத, சித்த, யுனானி மருத்துவர்கள் இதில் பங்குகொண்டார்கள்.

அக்குழுவினை வரவேற்கவும், கலந்துரையாடவும் வாய்ப்பளிக்குமுகமாக இலங்கையில் உள்ள சித்த ஆயுள்வேத யுனானி மருத்துவசபைப் பிரதிநிதிகள் கொழும்பில் ஏப்ரல் 1-ம், 2-ம் தேதிகளில் கூடவுள்ளனர். ஆயுர்வேத வைத்தியர்கள், டாக்டர்கள் எஸ்.பி.சி.ஈ. இன்னாசித்தம்பி, எஸ்.பி. அத்தநாசியார், எம். எஸ்.சுந்தரம். இ பொ. இராசையாஉட்பட இலங்கையில் இருந்து சுமார்முப்பதுபிரதிநிதிகளை இவ்வாரம் மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

## ஐயாறன்

தேர்தலில் இந்திராதான் வெல்லவேண்டுமென்றும் அவரே மீண்டும் பிரதமராகவேண்டுமென்றும் கூறிவந்த ஒருதாய், தேர்தல் முடிவுகளைக் கேட்டதும் ஒருவித ஆறுதலடைந்தார்! இந்திரா தன் தொகுதியிலும் தோல்வியடைந்தது நல்லதென்றும் சொன்னார்!

ஏன் என்று கேட்டேன். அவரும் அவரது கட்சியும் தேர்தலில் வென்று புதிய அரசாங்கத்தை அமைத்திருந்தால் அவரது உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்குமென்றும், பங்களா தேசத்தில் முஜிபுர் ரஹ்மானுக்கேற்பட்ட கதி, அவருக்கும் அவரது சகாக்களுக்கும் ஏற்பட்டிருக்கலாமென்றும், இந்திரா ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பியுள்ளதாகவும்கூறினார்.

எது நடந்தாலும் நல்லதுக்குத்தானே என்பது நினைப்பு வந்தது.

ஃ ஃ ஃ

பங்களாதேச பொதுத்தேர்தலில், முஜிபுர்ரஹ்மான்கட்சிக்கு அமோகவெற்றி கிடைத்தது. தேர்தலில் கோடிக்கணக்கான வாக்குகள் பெற்றும்,ஒரு சில துப்பாக்கி ரவைகள் அவ்வளவையும் பயனற்றதாக்கி, அவரையும் சகாக்களையும்குடும்பத்தாரையும் பூண்டோடு அழித்துவிட்டன.

ஜனநாயகம் எங்கே? பீரங்கியும் துப்பாக்கியுமல்லவா அதிக பலம் வாய்ந்தவை! வாக்குச்சீட்டைவிட துப்பாக்கிக்குழலே உலகத்தை ஆளுவதாக ஒரு பெரிய தலைவர் கூறியது நினைப்புவருகிறது.

ஃ ஃ ஃ

"யாருக்குப் பொன்னம்பலக் கிருபை இருக்குதோ அவனே பெரியவனும். பாருக்குள் வீடுகள் ஆடுகள் மாடுகள் பணமிருந்தால் அவன் பெரியவனாவானோ?" என்று நந்தனார் நாடகத்தில் ஒரு பிரபல பாட்டுண்டு. இக்காலத்தில் அதை மாற்றி யாரிடம் அதிகமான அணுக்குண்டுகள் உண்டோ, அவனே பெரியவனும் என்று கூறுவதே பொருத்தம். பொன்னம்பலக்கிருபையைப் பற்றி யாருக்கு மதிப்போ நம்பிக்கையோ இருக்கிறது?

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சதிவேலைகள் அதிகம் நடப்பதாக அடிக்கடி இந்திரா கூறிவந்தார். தேர்தல் முடிவுகள், இனி அவரைப் பொறுத்தவரையில் அவ்வித கவலைகளை நீக்கி இருக்கவேண்டும். இன்னும் சிறிது காலமாவது, அவர் நிம்மதியாக எவ்வித அச்சமுமின்றி ஓய்வெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவரால் சும்மா இருக்க முடியுமா?

ஃ ஃ ஃ

25 வருட காலமாக இன்னிசை கதாபிரசங்கங்கள் செய்துவரும் தமிழ்மணி கணேசசுந்தரம் அவர்களுக்கு, வண்ணை சிவன் கோவிலில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்து, அவர் சேவைகளைப் பாராட்டினர். இதை அறிய மிக மகிழ்ச்சியாக இருந்தது, நமது கவிஞர்களைப் பாராட்டுவது மட்டும் போதாது. பல விதங்களிலும் ஆதரிக்க வேண்டும்.

நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் நமது கலைகளையும் கலைஞர்களையும் ஆதரிப்பவர்களில்லை. கலைப் பயிர்கள்வாடிக் கிடந்தன. பெரிய குடும்பப் பொறுப்புள்ள கலைஞர்கள் இக்காலத்தில் எப்படி கவலையின்றி வாழ்க்கையை நடத்த முடியுமென்று நாம் சற்றே சிந்திக்க வேண்டும். கலைஞர்கள் கவலையின்றி வாழ்ந்தால் தானே கலைகளும் தலை தூக்கி வளர்ந்தோங்க முடியும்?

சில காலத்திற்கு முன் "தமிழ்மணி" கணேசசுந்தரத்தின் கதா பிரசங்கத்தைக் கேட்டிருக்கிறேன். இப்

(7-ம் பக்கம் பார்க்க)

# பிரஜாவுரிமைகொடுக்க டி. எஸ். சம்மதித்ததால் ஜி. ஜி. அரசாங்கத்தில் சேர்ந்தார்

## 67 வீத பிரஜாவுரிமை மனுக்கள் ஏற்கப்பட்டன

கொழும்பு - சிவா நடேசன்

பிரித்தானியா ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் அடைந்த நாடுகள் அந்நாட்டுக் குடிகள் யாரென்பதை வரையறுக்க நிபந்தனை வகுத்தனர். இந்தியா, பாகிஸ்தான், மலாயா, சிங்கப்பூர் ஆகியன வகுத்தன. ஏனெனில் இங்கேயுள்ள அனைவரும் பிரித்தானியா ஆட்சிக்குட்பட்டிருந்ததால் எல்லோரும்பிரித்தானியா குடிகள் என அழைக்கப்படும் கேவலமுறை அகற்றுவதுதான் நோக்கம்: இவ்வாறே இலங்கையும் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுதந்திரம் அடைந்ததும் 1948-ம் ஆண்டின் 13-ம் இலக்க பிரஜாவுரிமைச் சட்டத்தை வகுத்தது. அச்சட்டம் கூறுவதாவது:

(அ) இலங்கையில் பிறந்த ஒருவருடைய தகப்பன் இலங்கையில் பிறந்தவராம்.

(ஆ) அவருடைய அல்லது தந்தைவழிப்பேரனும் தந்தைவழிப்பாட்டனும் இலங்கையில் பிறந்தவராக அவர் இலங்கைப் பிரஜையாகக் கருதப்படுவார் அத்துடன்

(அ) இலங்கைக்கு வெளியே பிறந்தவர் இலங்கைப் பிரஜையாக மதிக்கப்படவேண்டுமானால் அவருடைய தந்தையும் தந்தைவழிப்பேரனும்இலங்கையில் பிறந்திருத்தல் வேண்டும். அல்லது

(ஆ) அவரின்தந்தை வழிப்பேரனும்பாட்டனும் இலங்கையில் பிறந்திருத்தல் வேண்டும்.

### குடியுரிமை பறித்த சட்டம்

இச்சட்டம்தான் இந்தியத் தமிழரின் குடியுரிமையைப் பறித்தது. பிரித்தானிய பிரஜைகள் என்ற அந்தஸ்து மட்டும்கொண்டுஇலங்கைப்பிரஜாவுரிமைபெறமுடியாது. மலைத் தமிழர் இலங்கையில் குடியேறியவர்கள். எனவே அவர்கள் ஒன்றில் இலங்கையில் பிறக்கவில்லை அல்லது அவர்களின் தந்தையரோ, பேரன்மாரோ இலங்கையில் பிறக்கவில்லை. ஆகவே இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ் அவர்கள் பிரஜாவுரிமை பெற முடியவில்லை. இந்தச் சட்டத்தை திரு. ஜி ஜி. பொன்னம்பலமும் திரு. எஸ். ஜே. வி.செல்வநாயகமும் மற்றும் தமிழ்க்காங்கிரஸ்உறுப்பினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் எதிர்த்து பாராளுமன்றத்தில் உறுதியாக எதிராக வாதாடியதை 1948ம் ஆண்டு ஆகஸ்ட் 20-ந் திகதி 'கான்சாட்'டில் 1821ஆம் பக்கம் முதல் 1861 வரை பார்த்தால் மிக எளிதாகப் புரிந்துகொள்ளலாம்.

இச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல நாட்களின் பின்னரே தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்தது.

### விவாதமேடை

### டி. எஸ். வாக்குறுதி

தமிழ்க்காங்கிரஸ் அரசுடன் சேரும்முன்னர் நடந்த பேச்சுவார்த்தைகளில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கூறிய பிரஜாவுரிமைச்சட்டம்சம்பந்தமாக முக்கியத்துவம் கொடுத்தார். பிரஜாவுரிமை இழந்த இந்தியர்களுக்கு(1948-ம்ஆண்டின் 18-ம் இலக்க பிரஜாவுரிமைச்சட்டத்தால்) அவ்வுரிமையை வழங்க ஒரு சட்டம் கொண்டுவருவதாக திரு. டி. எஸ்.சேனநாயக்கா திரு.ஜி.ஜி. பொன்னம்பலத்துக்கு வாக்குறுதி அளித்தார். அதன்பின்னரே தமிழ்க்காங்கிரஸ் அரசாங்கத்தில் சேர்ந்தது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் டி. எஸ்ஸின் அழைப்பின் பேரில் 1948-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கைத்தொழில் ஆராய்ச்சி கடற்றொழில் மந்திரியானார்.

1948-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம்1948ம்ஆண்டு 18-ம்இலக்க இலங்கைப்பிரஜாவுரிமைச் சட்டத்தால் உரிமையிழந்த மக்களுக்கு பிரஜாவுரிமைவழங்கவே கொண்டுவரப்பட்டது. இந்தியப்பிரதமரின் அங்கிகாரம் பெற்றபின்பே கொண்டுவரப்பட்டது, இந்தியா பாகிஸ்தான் பிரஜாவுரிமைச்சட்டம்.

இந்தியர் - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை மசோதாவின்படி இலங்கையில் குடும்பமாக ஏழுவருடங்கள் வசித்தவர்களும் விவாகமாகாமல் பத்துவருடங்கள் வசித்தவர்களும்பிரஜா உரிமைபெற உரிமையுடையவர்கள். இலங்கை-இந்தியகாங்கிரஸ், தமிழ்க்காங்கிரஸ் ஆகியன 5வருடவாசம்போதுமென வாதாடின. ஆனல் அரசாங்கங்கள் ஏழுவருடவாசம் அவசியமெனக் கருதியது. இவ்விடயத்தில் ஜி. ஜி. அரசாங்கத்துடன் ஒத்துப்போனர். நேர்மையுடன் வெளிப்படையாக சமரசம் செய்தது குற்றமா? பண்டிதர் நேருஜி ஆதரித்த மசோதாவை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சம்மதித்தது குற்றமா? 1948 செப்டம்பர் 8ந் திகதி நேருஜி, டி. எஸ். ஸுக்கு எழுதிய கடிதம் இக்கடிதம். 1948-ம் ஆண்டின்22வது அறிக்கையில் (Paper XXII) பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் பின்வருமாறு: 'இலங்கையில் வசிக்கும் இந்தியர்கள் பிரசாஉரிமை பெறுவதற்கு எவ்வித தாமதமின்றி ஒழுங்கு செய்யப்படவேண்டுமென்பதில் நான் மிகுந்த அக்கறைகொண்டிருப்பதால் இம் மதோதாவின் ஷரத்துகளை ஆராய்ச்சி செய்வதில் நீண்டகாலம் செலவுசெய்ய விரும்பவில்லை. மேலும் வாதிப்பதில் அதிகபலன்இல்லை. நீங்கள் சொல்வதைச் சொல்லிவிட்டீர்கள், நானும் சொல்வதைச் சொல்லிவிட்டேன். இலங்கையில் வசிக்கும் இந்தியரின் ஆவலைத்தீர்க்க ஏதாவது ஓர் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவே இலங்கை இந்தியர்கள் பிரஜாவுரிமைபெறச் சட்டமியற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மிகுந்த ஆர்வத்துடன் வேண்டிக்கொள்கிறேன்'.

இச்சட்டம் நேர்மையாக அமுல்செய்தால் 75% பிரஜாவுரிமை பெறுமென பாரதப் பிரதமர் நேருஜியும், ஜி.ஜி.யும் நம்பினர்கள்.

20-10-62இல் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சென்னை இந்து பத்திரிகையில் அளித்த பேட்டியின் ஒருபகுதி கீழே தரப்படுகிறது.

'இந்தியா இலங்கை பிரச்னையில் மட்டுமல்லாது பொதுவாக பிரஜாவுரிமைப் பிரச்னையிலும் இன்று காணப்படும் சிக்கல்களும் கஷ்டங்களும் பெரும்பாலானோர் ஊகித்ததுபோல் இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச்சட்டத்தினல் ஏற்பட்டவையல்ல இந்தியா—பாகிஸ்தானியர் சட்டத்திற்கு முற்றிலும் வித்தியாசமான இலங்கை பிரஜாவுரிமைச்சட்டமே எல்லாக்குறும்புகளையும் செய்திருந்தது'.

குடியுரிமைபெறவிரும்புவோர் மசோதா நிறைவேறி இரண்டு வருடங்களுக்குள் விண்ணப்பஞ்செய்து கொள்ள வேண்டுமென்பது. அச்சட்டத்தின் (இந்தியர் - பாகிஸ்தானியர் சட்டம்) ஐந்தாவது பிரிவிற் காணப்படும் நிபந்தனையாகும் விண்ணப்பங்களை நேரகாலத்திற்கு அனுப்பி வைக்காது இவர்கள் செய்தது என்ன? சட்டத்தை பகிஷ்கரித்து சத்தியாக்கிரக நடவடிக்கைகளில் இறங்கினர். ஒன்றரை வருடங்கள் இவ்வாறு பயனற்ற நடவடிக்கைகளில் இறங்கிய பின்னர் அதை கைவிட்டு பிரஜாவுரிமை கோரி விண்ணப்பஞ் செய்யும் முயற்சியில் இறங்கினர். ஆறு மாதங்களில் எத்தனைவிண்ணப்பங்களை அனுப்பலாம். அன்றியும் வாசத்தகுதி முதலியவற்றை ருசுப்படுத்தும் பத்திரங்களை அனுப்ப போதிய அவகாசம் கிடைக்கவில்லை பல விண்ணப்பங்கள் தேவையான பத்திரங்களின்றி சமாதான நீதவான் ஒப்பமின்றி வந்த பத்திரங்களை அரசாங்க அதிகாரிகள் இலகுவாக நிராகரித்து விட்டனர்.

### எஸ். ஜே. வி. கருத்து

இதை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூட 1964ம் ஆண்டு ஆவணி மாத திருமலை மகாநாட்டில் ஒப்புக்கொண்டார். சுதந்திரன் 13-9-68ல் விபரம் தேவையெனில் பின் மக்களுக்கு அவரின் தலைமையுரையை (மாநாட்டில்) தருகின்றேன்.

மலைநாட்டுத் தமிழர் மிகக் குறைவாக பிரஜா உரிமை பெறக்காரணம். கொத்தலாவலை அரசாங்கம் போலி நியாயங்களைக் காட்டி உத்தியோகவர்க்கம் செய்தகெடுதியாகும். சுப்றீம் கோர்ட்டுக்கும் பிறிவிக்கவுன்சிலுக்கும் அனுப்பப்பட்ட அப்பீல் வழக்குகளிலிருந்து இந்த உத்தியோகத்தர்கள் அநீதியாகவும் நேர்மையற்ற முறையிலும் பல விண்ணப்பங்களை தள்ளுபடி செய்தார்களென்பது தெரியவருகின்றது.

இவ்வாறு உத்தியோகத்தர்கள் அநீதியாக தள்ளுபடி செய்ய முற்பட்டமை திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரி சபையை விட்டு விலகிய பின்னரேயாகும். இதன் உண்மையை அந்நேரம் இந்திய நாட்டின் இலங்கைத் தூதர் திரு. சி. சி. தேசாய் அறிக்கை தரும். 1953 வரை 67 வீத மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

---

# ''நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய இவர்களை ஆசிரிய கலாசாலைக்கு விரைவில் அனுமதிக்கவும்''

யாழ்ப்பாணம், திங்கள்

தோட்டப் பாடசாலைகளிலிருந்து பயிற்சிக் கலாசாலை நுழைவுக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றி இதுவரை அனுமதி கிடைக்காதிருக்கும் தோட்ட ஆசிரியர்களை விரைவில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு அனுமதிக்குமாறு கல்விப் பகுதியைக் கோரும் தீர்மானம் இலங்கை ஆசிரியர் சேவைச் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் நாவலர் சந்தியிலுள்ள சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் திரு. ச. தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. பின்வரும் தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தோட்டப் பாடசாலைகளில் முன்னர் கடமையாற்றிய ஆசிரியர்களின் ஓய்வூதிய விஷயத்தைத் தொடர்ந்து பரிசீலித்து விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முன்னர் தோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றித் தற்போது வடபகுதிப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம், சம்பள முரண்பாடு முதலான பிரச்னைகளைத் தீர்க்க முன்வரவேண்டும்.

சொந்தச் செலவில் பயிற்சி பெற்ற தோட்ட ஆசிரியர்களுக்கு வெளியிடங்களில் நியமனம் வழங்கியமைக்குக் கல்வி இலாகாவுக்கு நன்றி தெரிவிப்பது.

தோட்டப் பாடசாலைகளில் தமிழர் ஆசிரியர்களையும் நியமிக்கவேண்டும். (அ)

---

## ஐ. தே. க. கிளைகள்

யாழ்ப்பாணம், திங்.

மானிப்பாய் தொகுதி ஐ. தே. கட்சியின் இணுவில் கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. அ. சுகுமார், துணைத்தலைவர்: திரு. இ. நித்தியானந்தன், செயலாளர்: திரு. கே. வி. ஜெயரட்ணசிங்கம், துணைச்செயலாளர்: திரு. சோ. தவலங்கைநாதன், பொருளாளர்; திரு. டீ. பூபாலசிங்கம்.

எண்மர்கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

° ° °

கிளிநொச்சி, ஞாயிறு

தர்மபுரம் யு என். பி. கிளையின் வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டு நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே.சிறீதரன் உப-தலைவர்: திரு. எல். ஜெகநாதன், செயலாளர்: திரு. ரி. வனராஜா, உபசெயலாளர்: திரு. எம். எஸ். சிற்றம்பலம். பொருளாளர்: திரு. ஏ. நடேசபிள்ளை.

ஒன்பதுபேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரியப்பட்டனர். (அ)

---

# ''அரசாங்கம் கிராமப்புறத்தில் கல்விவளர சகல உதவியும் செய்கிறது''

தெல்லிப்பழை, ஞாயிறு

''கிராமப்புறப் பாடசாலைகளின் கல்விவிருத்திக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துச் சகலவசதிகளும் செய்து கொடுக்கிறது. புதிய கல்வித் திட்டத்தில் உடற்கல்வி, தொழில் முன்னிலை போன்ற பாடங்களிலும் சித்தியடைந்தால்தான் தேசிய கல்விப் பொதுத்தராதரப்பரீட்சையில் சித்தியடையமுடியும் என்பதனுல் உடற்கல்விக்கும் விளையாட்டிற்கும் மாணவர் மத்தியில் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது''.

கட்டுவன்புலம் அரசினர் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், இவ்வித்தியாலயம் சிறியதாக இருந்தாலும் கல்லூரிகள், மகாவித்தியாலயங்கள் போன்று விளையாட்டுப் போட்டியை நடாத்தியமைக்கு இங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்களின் ஒற்றுமையும் முயற்சியுமேகாரணம்'' என்றார்.

வித்தியாலய அதிபர் திரு. வ. கதிரவேலு பேசுகையில், வித்தியாலயத்துக்கென ஒரு விளையாட்டுமைதானம் வாங்குவதற்கு அரசாங்கம் பணஉதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

விளையாட்டுப் போட்டிச் செயலாளர் திரு. எம். பீ. ஆசீர்வாதம் பேசுகையில், இவ்வருட சுற்றுக்கிண்ணம் வழங்கிய அதிபர்திரு.வ.கதிரவேலு, ஆசிரியர்கள் திரு. சீ. சிவநாக பிள்ளை, திரு. வ. இராசகுலசிங்கம், தற்காலிக விளையாட்டு நிலமும், பொருளுதவியும் வழங்கிய பெற்றூர், ஆசிரியர் மாணவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

சிவப்பு, நீலம், பச்சை இல்லங்கள் முறையே முதல்மூன்று இடங்களையும் பெற்றன. செல்வன் வே. தயாளன் (17 வயது), செல்வன் சோ. ஞானசேகரன் (13 வயது), செல்வி சி. செல்வதேவி (15 வயது) ஆகியோர் இவ்வருடத்துக்கான சுற்றுக்கிண்ணங்களை சுவீகரித்துக்கொண்டனர். (அ)

---

# ''திருக்குறள் ஒரு ஞானக் களஞ்சியம்''

ஆனைக்கோட்டை, ஞாயிறு

''மனிதர்களாகப் பிறந்த நாம் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். அறிவை வளர்த்துக்கொள்வதற்கு திருக்குறள் ஒரு ஞானக்களஞ்சியமாகும்.''

இவ்வாறு சைவபரிபாலன சபை சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவ நாயனர் விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

''வடமொழிக்கு வேதம் அறிவு நூல்போல் அமைந்திருக்கின்றது. அதேபோல் தமிழ் மொழிக்கு திருக்குறள் அமைந்திருக்கின்றது. மகாவிஷ்ணு இரண்டடியால் மூவுலகையும் அளந்தார். அதேபோல் திருவள்ளுவ நாயனரும் இருவெண்பாவினலே மூவுலகையும் அளந்துவிட்டார். திருக்குறளில் எல்லா அறங்களும் கூறப்பட்டுள்ளன. இந்நூலை இன்றைய இளைஞர்கள் முறையாகப் பயில வழிசெய்யவேண்டும்.'

வித்துவான் க. கணபதிப்பிள்ளை, சட்டத்தரணி திரு. க. சற்குணநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (க)

# எஸ்.ஜே.வி., சிவாசுகமடைய பிரார்த்தனை செய்யுங்கள்

## தமிழ்பேசும் மக்களுக்கு காங்கிரஸ் வா. மு. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. எம். சிவசிதம்பரம், ஆகியோர் பூரண சுகமடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறும், ஆலயங்களில் வழிபாடுகள் செய்யுமாறும் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.''

யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கமிட்டிக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

காங்கிரஸ் நிர்வாகச் செயலாளரின் இல்லத்தில் திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், ''அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அஞ்சலிக் கூட்டங்கள், அரசியல் பிரசாரக் கூட்டங்களாக மாறுவதையிட்டு மிகுந்த மனவருத்தம் அடைவதோடு, அக்கூட்டங்களை அஞ்சலிக் கூட்டங்களாகவே நடத்துமாறு கூட்ட அமைப்பாளர்களைக் கேட்டுக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு யாழ். முற்றவெளி மைதானத்தில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடாத்துவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, இதற்கு டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் தலைமையில் ஐவர் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில், வடமாகாணத்தில் உள்ள 14 தொகுதிகளுக்கும், தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தொகுதி அமைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு அமைப்பாளரும் தங்களுக்கு உதவியாக ஐவரைத் தெரிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது.

அடுத்த மூன்றுமாத காலத்திற்குள் யாழ்ப்பாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணி மாநாட்டை நடத்துவதென்றும், இம்மாநாட்டுக்கு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் 25 பிரதிநிதிகள் கலந்துகொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கட்சிப் பத்திரிகை ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதென்றும் இக்கூட்டத்தி[illegible] தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

## குறிஞ்சிக்குமரன் கோவில் திருமேனிகள் பவனி

யாழ்ப்பாணம், திங்கள்

பேராதனை வளாக குறிஞ்சிக் குமரன் கோயிலின் நிரந்தர மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் நடேசர், சிவகாமியம்மன், மாணிக்கவாசகர் திருமேனிகளின் ஊர்வல பவனி நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். தட்டாதெரு மில்க்வைற் அரசடி விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகும்.

ஊர்வல பவனி செல்லும் வீதிகள்: தட்டாதெரு அரசடி விநாயகர் ஆலயம், தட்டாதெருச்சந்தி, கந்தர்மடச் சந்தி, பலாலிவீதி, வயாவிளான்சந்தி, கட்டுவன், தெல்லிப்பழைச்சந்தி, மகாஜனக் கல்லூரி, அளவெட்டி, மாகியப்பிட்டிசந்தி, [illegible] யக்கல்லூரி, [illegible] சந்தி, காங்கேசன்துறைவீதி, சிவன் கோவில்வீதி, மிட்டாய்க்கடை சந்தி, அஞ்சல் அலுவலகம், பொதுநூலகம், யாழ்.மத்திய கல்லூரி, வேம்படிமகளிர் கல்லூரி, பருத்தித்துறைவீதி, நல்லை ஆதீனம்.

இரவு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (உ)

## ஏப்ரல் மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண அரசாங்க ஓய்வூதியர் சேமநலச் சங்கம் பென்ஷன் இலாக்கா அதிபருக்குவிடுத்துள்ள கோரிக்கையின் பேருக புதுவருடத்தையிட்டு ஏப்ரல் மாத ஓய்வூதியம் அம் மாதம் 7-ம் திகதியே யாழ்ப்பாணக் கச்சேரியில் வழங்கப்படும்.

......

## சுகாதாரத் திட்ட அறிவு

கொழும்பு, ஞாயிறு

'சுகாதாரத் திட்டங்கள் பற்றிய அறிவு தெளிவானமுறையில் மக்களுக்குப் புகட்டப்படாவிட்டால் அரசாங்கம் சுகாதாரசேவைக்கென பெரும் தொகைப்பணத்தைச் செலவழிப்பதில் அர்த்தமில்லை'' என்று சுகாதாரஅமைச்சர் திருமதி சிவா ஒபயசேகரா கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார். [உ]

# கிளிநொச்சியில் ராட்சத தண்ணீர்த் தாங்கி

## ரூ. 80 லட்சம் செலவாகும்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியில் 80லட்சம் ரூபா செலவில் தண்ணீர்த் தாங்கிஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

கிளிநொச்சிப்பட்டண எல்லைப்பிரதேசங்களுக்கும், ரசாயனத் தொழிற்சாலைக்கும், கடைகளுக்கும் குழாய்மூலம் நீர்விநியோகம் செய்வதற்காக இத் தண்ணீர்த்தாங்கி நிறுவப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்ஒருபகுதி செலவைப் பட்டணநிர்வாகமும், மற்றும் செலவினத்தை அரசாங்கமும்செய்வதாக அறியப்படுகிறது.

நீண்டகாலமாக இப்பகுதி மக்களால் கோரப்பட்டுவந்த இத்திட்டம் இப்பொழுது அமைவது ஒரு வரப்பிரசாதமாகும்.

பெரும்பாலான நீர்விநியோகமும் பரந்தன் ரசாயன தொழிற்சாலைக்கே வழங்கப்படுமாம். (அ)

## 'தொலைபேசி வசதி வேண்டும்'

கிளிநொச்சி, ஞாயிறு

தர்மபுரம் பகுதிக்குத் தொலைபேசி வசதி செய்து தரும்படி இப்பகுதி மக்கள், தபாற் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செ. குமாரசூரியரையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து விஸ்வமடுப் பகுதிக்கும் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தித் தரும்படியும் அப்பகுதி வாலிபர்கள் கோரியுள்ளனர். (அ)

## 'விரைவில் பத்தாயிரம் ஆசிரிய நியமனங்கள்'

### அத்தனகலயில் பிரதமர் தகவல்

அத்தனகல, ஞாயிறு

''விரைவில் பத்தாயிரம் பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்'' என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அத்தனகலையில் கிராமிய அபிவிருத்தி நிலையத்துக்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் பிரதமர் மேலும் கூறியதாவது:-

''எமது அரசாங்கம் இதுவரை நான்கு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பளித்துள்ளது. இதில் 30,000 பேர் ஆசிரிய நியமனங்கள் பெற்றனர். 1965-70ம் ஆண்டுகளுக்கு இடையில் ஆட்சி நடத்தியவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்துவைக்க எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லையென்பதும், இவ்விஷயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது

(7-ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களையும், தவறுனஎண்ணங்களையும் ஏற்படுத்தியுள்ளது. அனைத்தும் சிலதினங்களுக்குள் தீர்ந்து சமரஸநிலை உருவாகிவிடும்'' (உ)

## தவக்கால நற்சிந்தனை

''நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.'' (ஏசாயா 53:5)

நாம் செய்த பாவங்களுக்காக கிறீஸ்துநாதர் எத்தனை அளவு கொடுந் துன்பங்களையும் துயரங்களையும் ஏற்றார்! சிந்தித்துப்பார்த்தோமா நாம்? தூக்கமுடியாத பெருஞ் சுமையாகிய சிலுவை மரத்தைத் தோளிலே சுமந்து செந்நீரைச் சிந்தி துன்பங்களையும் துயரங்களையும் தாங்கினரே, அச்செயல் யார் பொருட்டு? பாரம்சுமக்கமுடியாமல் மூன்று முறை அவர் இடறி விழுந்த போது அவரை எழுந்திருக்கச் செய்யக் கொடும்பாவிகள் சாட்டையால் அடித்துத் துன்புறுத்தினர்கள்; அத்துயரையும் வேதனையையும் தாங்கி அவர்களுக்கும் இரக்கம் காட்டினரே. அது யாருக்காக? அந்த நேரத்தில் உலகப் பேரின்பச் சுடரொளி -சன்மார்க்க நெறி வளர்த்த ஞான ஒளி -உலகப் பாவங்களைப் போக்கவந்த பேரொளி, கிறீஸ்து பிரான் அடைந்த துன்பங்களுக்கு எல்லையுண்டா?

மேதினியின் பாவத்தைப் போக்க மௌனியாகக் காட்சி அளித்தாரே; அது யாருக்காக? ஞானவள்ளல் இயேசுநாயகன் பட்ட பாடுகளையெல்லாம் எண்ணிப் பார்த்தோமா நாம்! தமக்காகவே நம்மைப்போல் ஏழைக்கோலம் பூண்டு நம் பாவங்களுக்காகச் சிலுவையிலே உயிரைப் பலியாக்கினர். நம்முடைய அடங்காத் தன்மையின் காரணமாகவே தான் அண்ணல் கிறீஸ்து ஆக்கினையைப் பரிசாக ஏற்றார்.

இவை நாம் கொடுத்தபரிசல்லவா!

— ஞானஒளி


# தலை போகிறதா






பாடசாலை செல்லும பிள்ளைகளின் தாய்மார்களுக்கு அப்படித்தான்... ஆனல் கெமெக்ஸேனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தால் அப்படியிருக்கத்தேவையில்லை. தலைப்பேனை முற்ருக ஒழிக்க துரிதமான, நம்பிக்கையான வழி அதுவே. உங்கள் பிள்ளைகளின் தலையில் கெமெக்ஸேனை ஒரு தடவை உபயோகித்தாற போதும்- பேன் முற்ருக அழிந்துவிடும், மீண்டும் பேன் வராமல் தடுப்பதற்கு 3 வாரங்களின் பின்னர் மீண்டும் உபயோகியுங்கள கெமெக்ஸேன் பாதுகாப்பானது, புண்படுத்தாதது, இதமான வாசனையுடையது.

கெமிக்கல் இண்டஸ்ரீஸ்
(கொழும்பு) லிமிட்டட்,
த. பெ. எண் 352, ஹேமாஸ் கட்டிடம்,
பிரிஸ்டல் வீதி, கொழும்பு-1.
தெலிபோன்: 28421-6.

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
**அன்னமிட்ட கை**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார் – ஜெய்சித்ரா
**தேன் மழை**

**ராஜா**
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
தங்கவேலு
நடித்த
**இருவர் உள்ளம்** (புதிய பிரதி)

**ஸ்ரீதர்**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா சுந்தரராஜன்
நடித்த
**பாட்டும் பரதமும்**
(ஈஸ்ட்மன் கலர்)

8-வது வெற்றி வாரம்!
**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**இதயக்கனி**
(ஈஸ்ட்மன்கலர்)

**வின்ஸர்**
(யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வீரத் திருமகன்**
(புத்தம் புதிய பிரதி)

**வெலிங்டன்** முத்துராமன் சுஜாதா
[யாழ். நகர்]
நடித்த
தினசரி 4 காட்சிகள்
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**லிடோ** போன்: 7693
[யாழ். நகர்]
கல்யாணகுமார்
தேவிகா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
**நெஞ்சம் மறப்பதில்லை**
1-4-77 முதல் **கற்பகம்**

**REGAL**
(JAFFNA)
Daily at
4-45 7-00 & 9-30 P. M. only
CHRISTOPHER LEE in
**Scars of Dracula**
(Color)

**ராணி**
[யாழ்நகர்]
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா
நாகேஷ் நடித்த
தினசரி 4 காட்சிகள்
**நல்ல நேரம்**
(புத்தம் புதிய பிரதி)

**றியோ**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
அலெக்சாண்டர் டியூமாஸின் பிரபல்யமிக்க நாவல்
இப்பொழுது
எப்போதும் தயாரிக்கப்படாத அளவுக்குப்
பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள படம்
**THE COUNT OF MONTE-CRISTO**
சூழ்ச்சியாலும் சதியாலும்
காட்டிக்கொடுக்கப்பட்டுச் சிறையிலிடப்பட்டு
உயிரோடு அடைக்கப்பட்டிருந்த
நிரபராதி ஒருவனின் கதை.
ஆனல் அவன் இறந்துவிட்டதாக உலகத்துக்கு
அறிவிக்கப்பட்டது.
டாண்டே சாதாரண மனிதன் அல்ல!
பழிக்குப் பழிவாங்க அவனுக்கு 23 ஆண்டுகள்
பிடித்தன. பழிக்குப் பழிவாங்கியே தீருகிருன்.
வரலாறிலேயே தீரம் மிக்க செயல்.

பள்ளிக்கூடங்களுக்கு விசேஷ பிற்பகல்
1-30 காட்சி
(முன்னேற்பாடு செய்தல்வேண்டும்)
எல்லா வகுப்புகளுக்கும் ஒரே கட்டணமாக ரூ. 1-50
முகாமையாளருடன் தொடர்புகொள்க.
(ஒருசில நாட்களுக்கு மட்டும்)


## நள்ளிரவில் நடமாடிய 6 பேர் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

நள்ளிரவு நேரங்களில் காரணமின்றி சந்தேகத்திடமான விதத்தில் வீதியில் நடமாடியதாக அறுவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

மேற்படி நபர்களை சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜனப் இ.ஏ. ஏ. காதர் ஏழாலை, புன்னுலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பராய் ஆகிய பகுதிகளில் வைத்து நள்ளிரவு கைது செய்தார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் முன்னிலையில் இவர்கள் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (உ)

## ஆசிரியர்கள் கவலை

பண்டத்தரிப்பு, ஞாயிறு

பண்டிகை முற்பணமாக ஆசிரியர்களுக்கு 200 ரூபா வழங்கிவிட்டு அதை வழங்கிய மாதத்துச் சம்பளத்திலேயே முதற் கட்டுப்பணமான 20 ரூபாவைக் கழித்துவிட்டதையிட்டு ஆசிரியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதையிட்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளைச் செயலாளர் திரு. வி. சிவகுரு வடமாநிலக் கல்வி அதிகாரிக்கு ஆட்சேபம் தொரிவித்துக் கடிதம் அனுப்பயுள்ளார். (அ)

## த வி.கூ புதிய கிளை

திருகோணமலை, ஞாயிறு

திருகோணமலை பத்தாம் வட்டாரத்தில் தமிழர் கூட்டணிக்கிளை ஒன்றை திருமலை எம்.பி திரு.பா.நேமிநாதன் திறந்துவைத்தார். (உ)

## அமைச்சரைத் தாக்கியதாக வழக்கு

புதுடில்லி, மார்ச் 21

மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. கௌசியும், கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. முகர்ஜியும் தேர்தல் வேளையின்போது, கடந்த 18-ந் திகதி தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஒருவர் மீது பொலிசார் நேற்று வழக்குத் தாக்கல் செய்தனர். (உ)

## சட்டத்தரணி விடுதலை

கொழும்பு, ஞாயிறு

கையாடல் குற்றச்சாட்டின் பேரில் சட்டத்தரணி ஒருவருக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரியை கொழும்பு பிரதமநீதவான்திரு. ரி. சுந்தரலிங்கம் விடுதலை செய்தார்.

ஆர். ஸி. எம். ஜோசப் என்ற பிரஸ்தாப சட்டத்தரணி 50,000 ரூபாவைக் கையாடல் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

அரசதரப்பினர் தாம் எதிரி மீதான குற்றச்சாட்டை வாபஸ் பெறுவதாகத் தெரிவித்ததனையடுத்து நீதவான் எதிரியை விடுதலை செய்தார். (உ)

## ஏகமனதாகத் தெரிவு

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சிப்பிராந்திய இ.போ.ச.ஊழியர் மன்றப் பிரதிநிதியாக வீ.தியாகராசா ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார். (அ)


**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-உஷாநந்தினி
**ராஜபார்ட் ரங்கதுரை**


## ஐயாறன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போது அவரது இன்னிசையும் கதாபிரசங்கக் கலைத்திறனும் பக்திச் சுவையுடன் முன்னேறி அவர் முதல்வரிசை கலைஞராகி விட்டதைப் பார்க்க மிக மகிழ்ச்சியாக இருக்கிறது. தமிழ் மன்னர்கள் இல்லாத இக்காலத்தில் இவ்வித கலைஞர்களைப் பாராட்டி ஆதரிப்பவர்கள் நம் கலைகள் ஓங்கி வளரவும் சமூக வாழ்வு சிறப்புறவும் உதவுபவர்கள் ஆவர்.

மற்றவர்கள் உதவியின்றி தங்கள் சொந்த முயற்சியால் இறைவன் அருளால், முன்னேறி கலைகளை வளர்த்து வருபவர்கள் பலருண்டு. அவர்களை மறக்காமல் சிறப்பாக கோயில்களும் வசதிபடைத்தவர்களும் கூடிய ஆதரவை அளித்து அவர்கள் கவலையின்றி வாழ வழிசெய்வது கலை மகளின் உள்ளத்தைக் குளிரச் செய்வதாகும்.

## இரு கூட்டணியினர் தெரிவு

மாவிட்டபுரம், ஞாயிறு

மயிலிட்டிக் கடற்றொழிலாளர் மீன் பிடிக்கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்கான மக்கள் பிரதிநிதிகள் தெரிவில் இரு தமிழர் கூட்டணி ஆதரவாளர்களும் ஒரு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளரும் தெரிவுசெய்யப்பட்டனர்,

அச்சமயம் தமிழர்கூட்டணியைச் சேர்ந்த ம. மரியாம்பிள்ளை, கு. ஏ. தேவதிரவியம் ஆகியோரும், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த நா. பரமானந்தமும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## அமரர் ஏகாம்பரத்திற்கு அஞ்சலி

திருகோணமலை, ஞாயிறு

மூதூர் முன்னுள் எம். பி. அமரர் ஏகாம்பரத்தின் நினைவு நாள் அஞ்சலி அன்னுரது சமாதியருகில் இடம்பெற்றது.

அமரர் ஏகாம்பரம் மன்றம் இதனை ஒழுங்குசெய்திருந்தது.

மட்டுநகர் முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை, திருமலை எம். பி. திரு. பா. நேமிநாதன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (உ)

## செயலாளர் இடமாற்றம்

யாழ்ப்பணம், திங்கள்

அரசாங்க மருந்தகலவையாளர்கள் சங்கயாழ்மாவட்டக்கிளையின் செயலாளரும், கொக்குவில் அரசினர் மத்திய மருந்துச் சாலையில் மருந்தகலவையாளராகக்கடமையாற்றுபவருமான திரு.என்.எம். கந்தசாமி அடுத்தமாதம் முதலாம்திகதி தொடக்கம் அளவெட்டி அரசினர் மருந்துச் சாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். இவரின் இடத்துக்கு அளவெட்டி அரசினர் மருந்துச்சாலையில் கடமையாற்றும் திரு இ.தவராஜலிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## இன்று ஆரம்பம்

பண்டத்தரிப்பு, திங்கள்

பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

புதுவருடப்பிறப்புத்தினமான அடுத்த மாதம் 13.ந் திகதி புதன்கிழமையன்று தேர் உற்சவமும் 14-ந் திகதி வியாழக்கிழமை கீர்த்த உற்சவமும் நடைபெறும். (அ)


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## கட்சிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் ஆயிரக்கணக்தான வாலிபர்கள் எந்தக் கட்சிக்கும் செல்லாமல் கூட்டணியின் நடவடிக்கைகளுக்கு எந்த இடையூறும் செய்யாமல் அமைதியாக இருந்து ஆதரவளித்து வந்தனர். தலைவர் மறைவுக்குப் பின்னர் எப்படி இயங்குவது என்ற நிலையில் காங்கிரஸ் வாலிபர்கள் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுனணியின்கீழ் ஒன்று திரட்டி கூட்டணிக்கு முழு ஆதரவையும் வழங்கப்போகிறேன். தமிழன் ஒற்றுமைக்கும் தன்மானத்திற்கும் விடுதலைக்கும் என்றும் பாடுபடுவேன். அதற்கு வாலிபரின் பூரண ஆதரவு தேவை.''

வாலிப முன்னணி இணைச் செயலாளர் திரு. இ. ஏ. ஆனந்தராசா பேசும்போது, கூட்டணியின் இலட்சியம் நிறைவேற காங்கிரஸ் வாலிபர்கள் ஒன்று திரண்டு முழு சக்தியையும் வழங்கவேண்டுமென்றும் ஒவ்வொரு தொகுதியிலும் கிராமரீதியாக, காங்கிரஸ் வாலிபர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து காங்கிரஸ் தலைமைப்பீடத்தை உறுதியுடனும், வேகமாகவும் இயங்கச் செய்யவேண்டுமென்றும் அப்பொழுதுதான் கூட்டணியும் பலமடைந்து இலட்சியமும் விரைவில் நிறைவேறும் என்ருர்.

தமிழ்க் காங்கிரஸ் தலைமைப்பீடத்தைச் சந்தித்து பல விஷயங்கள்பற்றி பேச்சுவார்த்தை நடாத்த 10 பேர் கொண்ட கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. அடுத்த கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் 14 ம் தேதி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (க-அ)

## பாட்டாளிகள்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி]

ட்சிகரமாக மாற்றியமைக்க முடியாதென்பதைக் கடந்த ஏழு வருட அனுபவங்கள் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. ஐக்கிய முன்னணி உருவாக்குவதாயின் அது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையின்கீழ் சமுதாயத்தைப் புரட்சிகர முறையில் மாற்றியமைப்பதற்காகவே உருவாக்கப்படவேண்டும்.'' (உ)

## விரைவில்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எமது அரசாங்கம்தான் என்பதும் நாடறிந்த உண்மை.

ஒரு நாடு முன்னேறவேண்டுமானல் விவசாய, கைத்தொழில்துறைகள் அபிவிருத்தியடையவேண்டும். இதன் பொருட்டு தேசிய வளங்கள் தக்கவிதத்தில் பயன்படுத்தப்படவேண்டும்.'' (உ)

## பரம்பரை—

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுபற்றிய தகவல்களை கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ள வசதிசெய்யப்பட்டுள்ளது. [அ]

## யாழ்.—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த டாக்டர்களின் துண்டுகளுடன் இவர்கள் இங்குவருதால் கஷ்டமின்றி சிகிச்சை பெறமுடிகிறதென்றும், ஆனல் யாழ் மாநகரசபை பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகள் டாக்டர்களின்றி பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

யாழ்மாநகரசபையின் நிர்வாகத்தில் உள்ள டாக்டரிடம் முதலில்காட்டி துண்டு பெற்று வருமாறு கர்ப்பிணிகளுக்கு யாழ் ஆஸ்பத்திரியில் அறிவிக்கப்படுகிறதாம். இதில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்ட முடியாதா என்று கர்ப்பிணித்தாய்மார்கள் கேட்கிருர்கள். (ஆ)

ஈழநாடு
The EELANADU

# யாழ். மாநகரப்பகுதி கர்ப்பிணிகள் அவதி

## ஆஸ்பத்திரி டாக்டர்கள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபைப் பகுதிக் குட்பட்ட கர்ப்பிணிகள் யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்களினல் புறக்கணிக்கப்படுவதாக பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகள் 'கிளினிக்' செல்ல வேண்டுமானல் வேறு ஒரு டாக்டரின 'துண்டு' கொண்டுவரப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

வெளியூர்களிலிருந்து இங்கு வரும் கர்ப்பிணிகள் உடனுக்குடன் கவனிக்கப்படுவதாகவும் அவ்வப்பகுதி ஆஸ்பத்திரியைச்

(7-ம் பக்கம் பார்க்க)



யாழ்லயன் களியாட்டு விழாவில் ரோரு ஸ்தாபன மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

1-ம் படம்: ரோரு ஸ்தாபன பரிசுப் பொருட்களின் ஒரு பகுதி. 2-ம் படம்: ரசிகர்களின் ஒரு பகுதி. 3-ம் படம்: பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன் கவர்னர் பிரான்சிஸ் வர்ணகுலசூரியாவுக்கு த ரோரு லிமிட்டெட் முகாமை இயக்குநரான திரு. எஸ். சிவானந்தன் மலர்மாலை சூட்டிக் கௌரவிக்கின்றார். 4-ம் படம்: வெற்றிவாகை சூடியவர்களுக்கு திருமதி பிரான்சிஸ் வர்ணகுலசூரியா பரிசில்களை வழங்குகின்றார். [நல்லூர் நிருபர்]

# மூதறிஞர் செல்வாவின் மயக்கம் எப்போது தெளியும்?

## உடலில்அசைவு; வேறுபகுதிகளில் பாதிப்பில்லை

[நமது நிருபர் கா. யோகநாதன்]

மூதறிஞர் செல்வநாதயகத்திற்கு மயக்கம் தெளியாத போதிலும், கடும் நோயின் தாக்கத்தை மிகமிக லேசான உடல் அசைப்பின் மூலம் வெளிக்காட்டிக் கொள்ளக் கூடிய நிலையை மிக நுணுக்கமாக அவதானிக்கும்போது காணக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் அவர் சுவாசிக்கும்போது நெஞ்சிலும் வயிற்றுப் பகுதியிலும் ஏற்ற இறக்கத்தையும் உடல் அசைவையும் மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கிறது.

தந்தை செல்வாவின் உடல் நிலைமைபற்றி அறிந்துகொள்ள நூற்றுக்கணக்கான மக்கள் 'ஈழநாட்டுக்கு' தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டு வருகின்றனர். அவரின் உடல்நிலையை ஒருதடவையாவது நேரில் கண்டறிந்து மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என முயற்சித்தேன். அம்முயற்சி இருதினங்களுக்கு முன் வெற்றியளித்தது.

### எவருக்கும் அனுமதியில்லை

கடந்த வியாழக்கிழமை அதிகாலை நடந்த சத்திரசிகிச்சைக்குப் பின்னர், 16-ம் வார்ட்டிலுள்ள குளிரூட்டிய அறையில், டாக்டர்களின் கண்காணிப்பில் மூதறிஞர் செல்வா சிகிச்சைபெற்று வருகிறார். அந்த குளிரூட்டிய அறைக்குள் டாக்டர்கள், நர்சுகள் தவிர வேறு எவரும் தந்தை செல்வாவைப் பார்க்க அனுமதிக்கப் படவில்லை.

எனது மூக்கு, வாய்ப் பகுதிகளை துணியால் கட்டியபடி அந்த குளிரூட்டிய அறைக்குள் சென்றேன். அங்கு ஒரு கட்டிலில் தந்தை செல்வா படுத்திருந்தார். தலைமாட்டில் 2 நர்சுகளும், கால்மாட்டில் 2 நர்சுகளும் நின்று அவரைக் கண்காணித்து வந்தனர். அவர்களும் முகத்தில் துணி கட்டியிருந்தனர். தந்தை செல்வாவின் கட்டிலுக்கருகில் ஒருமேசை. அந்த மேசையில் டாக்டர் ஒருவர் அமர்ந்து, அவரின் உடல்நிலை அபிவிருத்தி பற்றி கிடைக்கும் தகவல்களை உடனுக்குடன் பதிவுசெய்து வருகிறார். மற்றொரு டாக்டர் அருகில் நின்று தேகநிலைமைகளை மிக நுணுக்கமாக ஆராய்வதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

### சிவப்பு றப்பரினல் கட்டப்பட்டிருந்தது

நான்பார்த்தசமயம் ஆழ்ந்த நித்திரையில் இருப்பவர்போல் காணப்பட்டார். தலையையும், உடலையும் வலதுபக்கமாக சிறிது சாய்ந்தநிலையில் கட்டிலில் படுத்திருந்தார். சத்திரகிகிச்சை செய்யப்பட்ட தலைப்பகுதி, நெற்றிக்கு மேல், ஒரு சிவப்பு றப்பரினல் கட்டப்பட்டிருந்தது.

உதடுகளை அசைத்து கண் இமைகளை வெட்டக்கூடியநிலை இன்னும் ஏற்படவில்லை. இந்நிலை படிப்படியாக இரண்டொரு தினங்களில் ஏற்படும் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

வழக்கம்போல் மூக்கினலேயே சுவாசித்துக்கொண்டிருக்கிறார். அவர்சுவாசிக்கும்போது நெஞ்சு, வயிறு பகுதிகளில் உடல் அசைவுகளைத்தெளிவாகக் கண்டேன்.

### குழாய்மூலம் குளுக்கோஸ்

வலதுமூக்குத் துவாரத்தினல் வயிற்றுக்குள் குழாய் பாய்ச்சப்பட்டு, அதன்மூலம் குளுக்கோஸ் கொடுக்கப்பட்டுவருகின்றது. அக்குழுக்கோஸ் வழக்கம்போல ஜீரணித்துவிடுவதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர். இதேசமயம் வலது கால் நரம்புகளின் மூலமும் குளுக்கோஸ் ஊசிமூலம்ஏற்றப் படுவதையும் பார்த்தேன். கால் விரல்களிலும் படிப்படியாக அசைவுகள் ஏற்படும் என டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

### ஒழுங்காக இயங்குகின்றன

தந்தை செல்வாவின் இருதயம், சுவாசப்பை, நாடித் துடிப்பு, இரத்தஓட்டம், சிறுநீரகம், ஆகியவை ஒழுங்காக இயங்கிவருவதாகவும், அவற்றில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லையென்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

கைவிரல்களில் நான்பார்த்த போது அசைவுகள் காணப்படவில்லை. படிப்படியாக கைவிரல்களில் அசைவுஏற்படும்என்றும் டாக்டர்கள் தெரிவித்தனர். நெஞ்சுப்பகுதி, கழுத்துவரை ஒரு கம்பளிப் போர்வையால் போர்த்தப்பட்டிருந்தது.

அவரின் உடலின் ஒவ்வொரு பகுதியும் அடிக்கடி பரிசோதனை செய்யப்பட்டுவருகிறது. டாக்டர்கள் மிகக் கவனமாகக் கண்காணித்து வருகின்றனர். கடமை நேரம் முடிந்தபின்னர் கூட, டாக்டர்கள் இரவுபகலாகத் தந்தை செல்வநாயகம் அருகில் நின்று உடல்நிலையைக் கண்காணித்துவருகின்றனர்.

### டாக்டர்கள் அனைவரும் கவனத்துடன் சேவை

சகல டாக்டர்களும் தந்தை செல்வா குணமடையவேண்டுமெனப் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றனர். டாக்டர்கள் மட்டுமன்றி, நர்சுகள், அற்றெண்டன்மார் மற்றும் ஆஸ்பத்திரி ஊழியர்களும் சகல ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றனர். வைத்திய அத்தியட்சகர் திரு. அமரசிங்கம் அடிக்கடி அங்கு வந்து தேவையான ஒத்துழைப்பை நல்கி வருகிறார்.

### டாக்டர்கள் நம்பிக்கை

தந்தையின் வயது காரணமாக அவரின் மயக்கம் மிக ஆறுதலாகவே தெளியுமென்றும் இரண்டு மூன்று தினங்களுக்குப் பின்னரே மூர்ச்சை தெளியுமெனவும் டாக்டர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

சுமார் 3 நிமிடங்கள் மட்டுமே அந்தக் குளிரூட்டிய அறையில் தந்தை செல்வாவிற்கு அருகில் நின்று அவர் உடல்நிலையை நேரில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது.

### சகோதரர் கேட்டறிந்தார்

நான் வெளியில் வந்தபோது தந்தை செல்வாவின் சகோதரர் என்னிடம் தந்தை செல்வாவின் உடல்நிலை பற்றிக் கேட்டறிந்துகொண்டார்

இரவுபகலாக டாக்டர்கள் கண்காணித்துவரும் அதேசமயம் தமிழ்பேசும் மக்கள் ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர். தொகுதிகள் தோறும் செல்வாவின் பிறந்ததினமான இம்மாதம் 31ந் தேதி விசேட வழிபாடுகள், பிரார்த்தனைகள் செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

எங்கு சென்றாலும் மக்கள் தந்தை செல்வாவின் உடல் நிலை பற்றி அறிவதிலேயே அக்கறை கொண்டுள்ளனர். தினமும் காலையில் விடிந்ததும் அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் காணவேண்டுமென்பதே மக்களின் பிரார்த்தனையாக இருந்துவருகிறது. (க)

## மூதறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மூக்குத் துவாரம் மூலம் குளுக்கோஸ் கொடுக்கப் பட்டுவருவதுடன் ஊசி மூலமும் குழுக்கோஸ்ஏற்றப்பட்டு வருகிறது.

திருமதி செல்வநாயகம், தொடர்ந்து அங்கிருந்து வருகின்ரறு. (அ)

### இரவு 12மணி நிலைமை

நேற்றிரவு 12 மணியளவில் ஆஸ்பத்திரி வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு திரு. எஸ். ஜே. வி. யின் நிலைமை பற்றிக் கேட்டபோது சிறிது முன்னேற்றம் காணப்படுவதாகவும், கை கால்களை அவர் அடிக்கடி அசைப்பதாகவும் தெரிவித்தனர். (ஆ)

### பிரார்த்தனை

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்ற 10-ம் ஆண்டு நிறைவு விழா ஞானசம்பந்த ஆதீனத்தில் தலைவர் ஆ. துரைராசசிங்கம் தலைமையில் நடைபெற்றபோது தந்தை செல்வாவின் உடல் நலத்திற்காக பிரார்த்திக்கப்பட்டது.

## ஜெகஜீவனுக்கு—

(1-ம் பக்க தொடர்ச்சி)

ஆதரவுகொடுக்கும் என்ருர் எம்,ஜி.ஆர்.

### முன்னையஅரசில் எம். ஜி. ஆருக்கு பிடிக்காத காரியம் இது

முன்னைய காங்கிரஸ் ஆட்சியின் போது இந்திராவின் 20 அம்சத்திட்டத்தை ஆதரித்த அதேவேளையில், அரசியல் அமைப்பில் செய்யப்பட்ட திருத்தங்களை தமது கட்சி அப்போதுவிரும்பவில்லை என்று திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

### பிரதமரைச் சந்தித்தனர்

இது இப்படியிருக்க நேற்று காலை அ. அ. தி. மு. க. பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. எம். வி. சோமசுந்தரம் தலைமையில் தூதுக்குழு ஒன்று பிரதமர் மொரார்ஜிதேசாயை புதுடில்லியில் சந்தித்து தமது கட்சியின் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டதாக பிரதமர் மொரார்ஜி தெரிவித்தார்.

இந்திராவை ஆதரித்து வந்த திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இப்போது புதிய அரசுடன் சேர்ந்து நடக்க விருப்பம் தெரிவித்திருப்பதையிட்டு ஜனதா கட்சியின் புதிய அமைச்சர் ஒருவர் ஆச்சரியமும் அதேவேளையில் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார்.

### ஜம்பு காஷ்மீர் முதல்வர் ராஜினமா

ஜம்புகாஷ்மீர் முதலமைச்சர் சேக் அப்துல்லா பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். இவர் ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு அனுப்பிவைத்துள்ள தந்தி ஒன்றில் மிக விரைவில் மாநிலசட்டமன்றத் தேர்தல் நடைபெறும் எனத் தாம் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu (P. O. Box 49, Jaffna) Telegrams: Eelanadu, Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.